மதங்கள்

மூலம்: இங்கர்சால்

தமிழ்: ஊடுருவி

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு: 72
முதற்பதிப்பு: மே 1953
உரிமை உடையது

விலை ரூ. 1-0-0

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார், சென்னை-1

சந்தேகமில்லை

—o—

"மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை. மதங்கள் உலக மக்கள்-இனத்தை பிரித்து வைத்திருக்கின்றன. இந்த மதம் என்னும் கட்டுப்பாடு இல்லையென்றால், உலகத்தில் எந்த மூலையில் வாழும் மக்களும், மனித குலத்தவராகவே கருதப்பட்டு - மதிக்கப்பட்டு வருவார்கள்." என்றபல விளக்கங்களை **மதங்கள்** என்னும் இந்நூலில் **அறிஞர் இங்கர்சால்** எடுத்து விளக்குகிறார்.

அவர்தம் அரியபல நூல்களை தமிழகம் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டது குறித்து மகிழ்கின்றோம். இதனையும் ஏற்று மகிழும் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை.

வணக்கம்,

கலைமன்றத்தினர்.

ஆசிரியரின் பிற நூல்கள்

—o—

ஆராய்ச்சி

கோயில்கள் (இங்கர்சால்)
உண்மை ,,
மக்கள் உரிமை ,,
அறியாமை ,,
கடவுள் ,,
அரசாங்கம் (லெனின்)
மாஜி கடவுள்கள்
தொழிலாளர் (மாஜினி)

வரலாறு

கலிங்கப்போர்
வீரமங்கை ஜோன்
உலகைத் திருத்திய
உத்தமர்கள் (1-ம் பாகம்)
ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)
சீனத்துச் சிங்கம்
ரஸ்புடீன்
நெப்போலியன்

கதைகள்

ரோமியோ-ஜூலியத் (ஷேக்ஸ்பியர்)
லைலா - மஜ்னு
நாநா (எமிலிஜோலா)

1

முதலும் முடிவும் இல்லாத கடவுள் ஒருவர் உண்டு என்றும், அவர்தான் இந்த உலகையும், உலகப் பண்டங்களையும் உண்டாக்கினரென்றும், அந்த கடவுளால் படைக்கப் பெற்ற உலகை அவரே ஆட்சி புரிகிறார் என்றும், அவரால் படைக்கப்பட்ட பொருள்களில் மனிதனும் சேர்ந்திருக்கிறான் என்றும், கூறுகின்றனர்.

அன்றியும் அவனால் படைக்கப்பட்ட இந்த உலகமும், உலக மக்களும் அந்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

இவ்வளவு பெரிய உலகத்தைப் படைத்து அதில் எல்லாப் பொருள்களையும் படைத்த பரமன், மனிதர்களிடமிருந்து சிலவற்றை கேட்கிறான் என்றும், அவன் கேட்பவற்றை தடையின்றி, மறுமொழி சொல்லாமல் கொடுத்து, ஆண்டவன் உத்தரவை எவன் நிறைவேற்றி வைக்கின்றானோ அவன் தான் உண்மையான மதப்பற்றுடையவன் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த மதம் தான் உலகில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், முதன்மை உடையதாகவும் கருதப்பட்டுப் போற்றப்பட்டு வருகிறது.

இந்தக் கடவுள் மக்களிடம் கேட்ட தென்ன? உயிர் பலி! ஆம்! தோழர்களே! அநேக நூற்றாண்டுகளாக, அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த மக்களிடம் இந்தக் கடவுள் பலிகள் தேவை என்று கேட்டார் என்றும், பிரியத்தோடும், அன்போடும் பெற்று வளர்த்த தாய் தந்தையர், தங்கள் குழந்தைகளின் இரத்தத்தைப் பெருக்கெடுத்தோடச் செய்தனர் இவைகளைக் கண்டு இறைவன் திருப்தி அடைந்தார் என்றும் நம்பப்பட்டது.

நாள் கழிய கழியக் கடவுள்கள் தங்கள் பலிகளை சற்று மாற்றிக் கொண்டன. அதாவது மனிதர்களை பலி கேட்ட கடவுள்கள், எருதுகளை பலி கொடுத்தால் போதும் என்ற நிலைமைக்கு வந்தன. பின்னர் எருதுகளிலிருந்து ஆடுகள் என்ற நிலைமைக்கு வந்தன. அதன் பிறகு புறாக்கள் மட்டும் போதும் என்ற நிலைமைக்கு வந்து விட்டன.

ஆம்! கடவுள்கள், மனிதனின் இரத்தத்தால் திருப்தி அடைந்த காலத்தி லிருந்து மிருகங்களின் இரத்தத்தால் நிம்மதி அடையும் காலத்துக்கு வந்து பின்னர் பறவைகளின் குருதியால் மகிழ்ச்சி யடையும் தன்மைக்கு வந்து விட்டன.

கடவுள்கள் மனிதனிடத்தில் பலியை பெற்றுக் கொண்டார்கள் அல்லவா? பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா? ஆம்! அந்தக் கடவுள்கள் செய்திருக்கின்றன.

பலிக்குப் பதிலாக கடவுள் மழையை அளித்தார், சூரிய வெளிச்சத்தைத் தந்தார். பயிர் பச்சைகளை நன்கு வளர்த்து நல்ல அறுவடையை நல்கினர் என்று எண்ணப்பட்டது.

கடவுள்களுக்கு விருப்பமான பலிகளை மக்கள் தரா விட்டால் என்ன நேரும் தெரியுமா? கடவுள் உடனே கோபித்துக்கொள்வார். தொத்துநோய்களை உலகின்மீது படை யெடுக்கும்படி அனுப்புவார். "பஞ்சமே நீ பறந்து சென்று பாரினை நாசமாக்கு" என்று கூறுவார். "வெள்ளமே நீ விரைந்தோடு, வேதனையை நல்கு" என்று இயம்புவார். "என் கட்டளையை நிறைவேற்ரு தப் புவி மக்களை, பூமியே! உன் வாயைத் திறந்து விழுங்கி விடு" என்று கட்டளை யிடுவார் என்றெல்லாம் நம்பப்பட்டது.

இந்தப் பலியைப் பற்றின கடைசிக் காலம் எது வெனில், கிறித்துவ மதக் கொள்கையின்படி, கடவுள், அவருடைய மகன் கொலை செய்யப்பட்ட போது அவன் சிந்திய இரத்தத்தால் முழு திருப்தியும் அடைந்து விட் டார். அத்துடன் கடவுளுக் கிருந்த இரத்த வெறி முழுக்க முழுக்க அடங்கி விட்டது. அதற்குமேல் அவர் இரத்தப் பலியை விரும்பவில்லை.

அதன் பிறகு கடவுள் மக்களிட மிருந்து இரத்தப் பலிகளை கேட்பதை நிறுத்திக் கொண்டார். அதற்குப் பதிலாக வேறு முறைகளை அவர் கையாண்டார். அவை கள், பிரார்த்தனைகள், ஜெபங்கள், தோத்திரங்கள் முத

வியன. இவற்றைச் செய்தால் மட்டும் போதும், கடவுள் இரங்கி தேவைகளை நிறைவு செய்து தருவார் என்றும், பிரார்த்தனை செய்பவர்களின் பாபங்களை மன்னிப்பார் என்றும், தன்னை உண்மையாக நம்பிய நம்பிக்கை யாளர்களை காப்பாற்றுவார் என்றும், மக்கள் நம்பி வந்தனர்.

இவையே மதத்தைப் பற்றிய பொதுவான விளக்கம்.

இப்போது நாம் உண்மையை அறிந்து கொள்வதற்காகச் சில கேள்விகளை கேட்டுக் கொள்வோம்.

1. மதத்தின் உண்மையான அடிப்படை எது?
2. கடவுள் என்று ஒருவர் உண்டா?
3. அவரா உங்களையும் என்னையும் படைத்தவர்?
4. எவ்வளவோ பிரார்த்தனைகள் செய்திருக்கின்றனரே, ஒன்றுக்காகிலும் பதில் கிடைத்ததுண்டா?
5. எருதுகளைப் பலியிட்டவர்களும் காணவில்லை கடவுளை. குழந்தைகளைப் பலி யிட்டவர்களும் காணவில்லை கடவுளை. அப்படி யிருக்க அந்தக் காணாதக் கடவுளால் எந்த நன்மையாகிலும் ஏற்பட்ட துண்டா?

இவைகள் கேள்விகள். இனி ஆராய்வோம்.

மனிதர்களை ஆதியந்த மில்லா கடவுள் படைத்தார் என்பது உண்மையா?

அப்படியாயின் :—

அவர் ஏன் குறைந்த அறிவுடையவர்களை — முட்டாள்களைப் படைத்தார்?

அவர் ஏன் உலகிற்கும் தனக்கும் உபயோகப் படாத உடலுறுப் பிழந்தவர்களைப் படைத்தார்?

அவர் ஏன் குற்றவாளிகளைப் படைத்தார்? மூடர்களைப் படைத்தார்? பைத்தியக் காரர்களை அவர் ஏன் உண்டாக்கினர்?

ஆண்டவன் படைப்பில் பல தோல்விகள் உண்டே அவைகளுக்கு முடிவில்லாத அறிவும், சக்தியும் ஏற்ற சமாதானம் கூறுமா?

படைத்தவனுக்கு உதவி புரியத்தான் தோல்விகள் இருக்கின்றனவா?

அந்த எல்லை யற்றப் பரம் பொருள்தான் இந்த உலகை ஆளுகிறதா?

அப்படியாயின்.

அந்தக் கடவுள்தான் தலைவர்கள் செய்யும் தவறுகளுக்கும், அரசரர்கள், சக்ரவர்த்திகள், அரசிகள் முதலியவர்களின் செய்கைகளுக்கும் பொறுப்பாளரா?

நடத்தப்பட்ட யுத்தங்களுக்கும் அவர்தான் காரணமா?

செய்யப்பட்டக் குற்றங்களுக்கும் அவர்தான் பொறுப்பா?

நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நிலைபெற்று இருக்கின்ற அடிமைத் தனத்திற்கும் அவர்தான் காரணமா?

குற்றமற்ற மக்கள் முதுகின்மேல் விழுந்த சவுக்கடிகளுக்கு அவர்தான் பொறுப்பா?

பெற்ற தாய்மார்களிட மிருந்து பிரித்து விற்கப்பட்ட குழந்தைகளுக்கும், குடும்பங்களைப் பிரித்து அடித்து விரட்டிய கொடுமைகளுக்கும் காரணம் அவரா?

மதங்கள் செய்த கொடுமைகளுக்கும், நியாய விசாரணையின் பேரால் நீதி வழங்கும் மன்றங்கள் இழைத்த அநீதிக்கும், மக்களை மரக்கட்டையில் பிணைத்ததற்கும் இன்னும் சொல்ல வாய்கூசும் துன்பம் விளைவுக்கும் கருவிகளுக்கும் இந்தக் கடவுள்தான் பொறுப்பாளியா?

இந்தக் கடவுள்தான், கோடுங்கோலர்கள், வீரர்களை அழிக்க அனுமதி தந்தாரா? போக்கிரிகள், நேர்மையாளர்களை அழிக்க உத்தரவு கொடுத்தாரா?

இந்த பரமன்தான், துரோகிகள், உண்மையான நாட்டுப் பற்றுள்ளவர்களின் குருதியை கொட்ட அனுமதி தந்தனரா?

அவருடைய நண்பர்களை, அவருடைய எதிரிகள் வேதனைப் படுத்தவும், எரிக்கவும் அனுமதி அளித்தாரா?

ஆம்! என்றால், அப்படிப்பட்டக் கடவுள் என்ன கடவுள்?

ஆற்றலுடைய, ஒரு நல்ல மனிதன், தன் நண்பர்களை எதிரிகள் துன்புறுத்தும் போதும், வேதனைப் படுத்தும் போதும், எரிக்கும்போதும் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பானா?

ஒரு பிசாசு நண்பர் அழிவுக்காக தன் எதிரிகளை நாடுவதாக நாம் எண்ண முடியுமா?

இந்த உலகம் எல்லையற்ற கடவுளால் ஆளப்படும் போது, பலம் பொருந்திய கடவுளால் ஆளப்படும்போது, சுழல்காற்று ஏற்பட வேண்டிய காரணம் என்ன? பூகம்பம் உண்டாவானேன்? கொள்ளை நோய் எப்படி வரலாம்? பஞ்சமும், பட்டினியும் படை எடுக்க என்ன காரணம்?

இளமையை இரையாக்கிக் கொள்ளும் புற்று நோய்க் கிருமிகள், டிப்தேரியா போன்றபல ஆயிரக் கணக்கான நோய்களுக்கு என்ன காரணம் கூறுவீர்கள்?

மக்களைக் கொன்று விழுங்கும் கொடிய காட்டு மிருகங்களுக்கும்—கடித்ததும் உயிர் பிரியும் கொடிய நச்சுப் பற்களையுடைய பாம்புகளுக்கும் நம்மால் எப்படி விளக்கம் தரமுடியும். ஏன் பாம்பின் பல்லில் விடம் வைத்

தார், புலிக்கும் சிங்கத்திற்கும் மனிதனைக் கொல்லும் குணம் வைத்தார் என்பதை விளக்க முடியுமா?

ஓர் உயிரை மற்றொரு உயிருக்கு உணவாகும் உலகத்தைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்?

கூர்மையான மூக்குகளும், கொடிய நகங்களும், கோரப் பற்களும், நச்சுப் பற்களும் எல்லையற்ற இரக்க முள்ள இறைவனால் கண்டுபிடித்துப் படைக்கப் பட்ட வைதானா?

அளவிட்டு கூற முடியாத நன்மையாளன் தான் பறந்து செல்லுகின்ற சிறு பறவைகளை (இரையை) தொடர்ந்து பிடிக்க கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் இறக்கைகளை அளித்தானா?

மீனைத் தவளைபிடிக்க அந்தத் தவளையை பாம்பு பிடிக்க செய்தவன் .யார்? பலமற்ற, ஆதரவற்றவை களை விழுங்கிய பின், தானும் வேறொன்றுக்கு ஆகார மாகக் கூடிய மிருகங்களைப் படைத்ததும் அந்த நல்ல வர்தானா?

கணக்கிட்டுக் கூற முடியாத பயனற்ற உயிர்ப் பிராணிகளை அவைகளுக்குள்ளே ஒன்றை ஒன்று உண்டு, பின்னர் பெரிய உயிர்களுக்கு பலியாகும்படி படைத்ததும் அந்த நல்லவர்தானா?

கண்ணை உண்டு வாழுகின்ற, கண்ணுக்கும் தெரி யாத மிகமிகச் சிறிய உயிர்களை வேணுமென்றே

படைத்ததும் அந்த அளவிடற்கரிய அறிவொளியான வன் தானு ?

அன்புடையவர்களே !

ஒரு சிறிய உயிருக்காக—அதன் பசியடங்குவதற் காக ஒளி மிகுந்த—உலகைக் காட்டுகின்ற கண்களை இழக்கும் குருடனின் நிலையை எண்ணிப் பாருங்கள் !

ஒரு உயிரைக் கொன்று தின்று உயிர்வாழும் மற் ருெரு உயிரையும் எண்ணிப்பாருங்கள் !

வேதனைப் படுகின்ற உயிர்களைப் பற்றிச் சிந்தி யுங்கள் !

கொடுமைச் சரிவின் மீது இரத்தத்தைச் சிந்து கின்ற நியாய காரணம் பற்றி எண்ணிப் பாருங்கள் !

இவ்விதமான உண்மைகளின் மீது நாம் நின்று ஆராயும் போது மதம் என்பது என்ன?

அஃதோர் அச்சம் !

அச்சம் பலிபீடம் அமைத்து பலியிடுகிறது.

அச்சம் பிரதான கோயிலைக் கட்டி, அங்கே மக் களை பிரார்த்தனையால் தலைவணங்கச் செய்கிறது.

அச்சம்—மண்டியிடச் செய்கிறது !

அச்சம்—துதிகளையும், தோத்திரங்களையும் பாடச் செய்கிறது !

அச்சம்—அன்பு காட்டுவதாகப் பாசாங்கு செய்கிறது!

மதம்—அடிமைத்தனத்தைக் கற்பிக்கிறது!

மதம்—அடக்கத்தைப் போதிக்கிறது!

மதம்—தாழ்வை உபதேசிக்கிறது!

மதம்—தன் சொந்த தேவைகளை மறுக்கச் செய்கிறது!

மதம்—மன்னிப்பைக் கற்றுக்கொடுக்கிறது!

மதம்—எதையும் எதிர்க்காதே என்று வற்புறுத்துகிறது!

இந்த அச்சமும், பக்தியும் சேர்ந்து மனிதனை என்ன செய்துவிட்டன என்பதை எண்ணிப்பாருங்கள்!

அச்சம் கொண்டவர்களும், பயபக்தி மிகுந்தவர்களும் என்ன கூறுகின்றனர். நடுங்கிய உடம்புடன், 'படபட' வென அடித்துக்கொள்ளும் உள்ளத்துடன், "அவன் என்னைக் கொன்றாலும் நான் அவனை வாழ்த்துவேன்" என்றே கூறுகின்றனர்.

இதற்கு என்ன பொருள் கூறுவது? இது மனித இனத்தை அவமானப் படுகுழியில் வீழ்த்துவதாகும்.

மதம்—மனிதன் தன்மீது பற்றுவைக்க கற்பிக்காது!

மதம்—மனிதனுக்கு சுய உரிமை வழங்காது!

மதம்—ஆண்மையைப் போதிக்காது !

மதம்—வீரத்தைப் பற்ற சொல்லிக்கொடுக்காது !

மதம்—தற்காப்பை உபதேசம் செய்யாது !

மதம்—ஆண்டவனை ஆண்டையாக்குகிறது !

மதம்—மனிதனை அடிமையாக்குகிறது !

இந்த ஆண்டை, அடிமைத்தனம் என்பவைகளை ஒருக்காலும் இனிக்கச் செய்ய முடியாது.

Acc. No. 2336
Dt 9.5.28.

2

இவ்வித குணும்சங்கள் பொருந்திய கடவுளிருந்தால், நாம் அவரை எப்படி கடவுள் என்று தெரிந்து கொள்வது?

கடவுள் இரக்கம் மிக்கவர்; தயாள சிந்தையுடையவர்; மிகமிக நல்லவர்; அவர் தன் குழந்தைகளாகிய மக்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்புடையவர் என்று கூறுவதை நாம் எதைக்கொண்டு நிரூபித்துக் காட்டுவது? எவ்விதம் உறுதிப்படுத்துவது?

இந்த நல்ல கடவுளை நம்பி, அவர் மக்களாகிய மனிதர்கள் கடவுள் காப்பாற்றுவார் என்று கருதி நிலத்தை உழுது, நீர் பாய்ச்சி, விதை விதைத்து தானியங்களை உற்பத்தி செய்ய முனைகின்றனர். இதை அந்த நல்ல கடவுள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். இந்த உலக மக்கள் உயிர்வாழ இந்த தானியங்கள் தான் முக்கியப் பொருள் என்பதையும் உணர்ந்திருக்கிறார். இருந்தும் மக்கள் உயிர் வாழ உதவி புரியும் பயிருக்கு உயிரான ம்ழையை கடவுள் நிறுத்தியிருக்கிறார். ஏன் அவர் அவ்விதம் செய்தார்?

பச்சைப் பசேலென்று வளர்ந்த பயிர்களின் பசுமையைப் போக்கும் அளவுக்கு கதிரவனை காயும்படி

செய்துவிட்டு மழையைப் பெய்ய வொட்டாமல் தடுத்து விட்டார். ஆம்! மக்கள் நிலத்திலே விதைத்த விதைகள் கருகுவது கண்டும் கடவுள் கண் திறக்கவில்லையே, ஏன்?

பயிர் தீய்ந்து, நிலம் காய்ந்து, காய்ந்த நிலங்களைத் தன் கண்ணீரால் நனைக்கும் மக்களைக் கண்டபோதும் கடவுளின் இளகிய உள்ளம் இரங்காதது ஏன்?

மழை பொழியாததால் மனம் வாடிய மக்கள் சேமித்து வைத்திருந்த தானியங்களைத் தின்றுவிட்டு மேலும் உயிர் வாழ உணவின்றி பட்டினியால் பரதவித்து — பஞ்சத்துடன் போராடி துடிதுடிக்கும் மக்களையும் கண்டார். அப்போதும் மழையை பெய்ய விடவில்லை, கருணைக் கடலாகிய கடவுள்.

பசியால் அழுத குழந்தைகளைக் காண்கிறார்கடவுள்; அழுத குழந்தைகளை அணைத்துக்கொண்டு, "ஆண்டவனே, ஆபத்பாந்தவா என்குழந்தையைக் காப்பாற்று" என்று கதறும் அன்னைமார்களையும் பார்க்கிறார்; "பெற்ற பிள்ளையும், பிரிய மனைவியும் பட்டினி கிடக்கின்றனரே, பகவானே அருள்புரிவீர்" என்று பிரார்த்தனை செய்யும் தகப்பனையும் காண்கிறார் அந்த நல்ல கடவுள். அப்போதும் மழை பெய்யவில்லை.

பசியால் குழிந்த கண்களுடையவர் செய்த துதி பாடல்களைக் கேட்டுக்கொண்டார். மழை மட்டும் பொழியவில்லை.

பின்னர் பசி தாளாமல் மிருகங்களுடன் போராடி, அவைகளைக் கொன்று மென்று தின்று தம் பசியை அடக்கிக் கொண்டதைப் பார்த்தார். அப்போதும் அனுப்பவில்லை மழையை!

பசியைத் தாங்க முடியாது, அறிவிழந்த பெற்றோர்கள் தாங்கள் பெற்ற குழந்தைகளைக் கொன்றார்கள்; தின்றார்கள். இருந்தும் என்ன? ஆகாயம் பித்தளையாகவும், பூமி இரும்பாகவும் இருந்ததே யொழிய மழை பொழியவில்லை!

அந்தக் கடவுள் உள்ளத்திலே இரக்கம் என்னும் மலர் பூத்தது என்று நாம் சொல்ல முடியுமா?

அந்தக் கடவுள் அவர் குழந்தைகளான உலக மக்களுக்காகக் கவலைப்பட்டார் என்று நினைக்க முடியுமா?

அந்தக் கடவுளின் இரக்கம் என்றும் நிலைக்கும் என்று சொல்ல முடியுமா?

கிராமங்களை அழித்து, வயல்களை, பெற்றோர்களையும் குழந்தைகளையும் சிதறிச் செல்லும்படியான நாசத்தை விளைவிக்கும் சுழல் காற்றை ஏவியதற்காக நாம் கடவுளை மிக நல்லவர் என்று சொல்லமுடியுமா?

பூமி வெடித்து, ஆயிரக் கணக்கானவர்கள் விழுங்கப்பட்ட கோரத்தைச் சுட்டிக்காட்டி கடவுள் நல்லவர் என்று சொல்ல முடியுமா?

எரிமலை வெடித்து கக்கிய நெருப்பாற்றிலே ஆயிரக் கணக்கானவர்கள் மூழ்கி மடிந்த பயங்கர நிலையைச் சுட்டிக்காட்டி கடவுளை நல்லவர் என்று விளக்க முடியுமா?

இந்தத் துன்பங்கள் நேராமலிருந்தால் நாம் கடவுளைப்பற்றி சந்தேகிப்போமா?

பாழும் பஞ்சமும், பயங்கரக் கொள்ளை நோயும், சுழல் காற்றும், பூகம்பமும் இல்லாமலிருந்தால், நாம் கடவுளைப்பற்றி குறை கூறுவோமா? கடவுளை நல்லவர் அல்ல என்று கூறுவோமா?

இதுதான் போகட்டும். மதவாதிகள் மேலும் கூறுவதைப் பாருங்கள்.

கடவுள் மனிதர்களை எல்லாம் ஒன்றுகப் படைக்கவில்லையாம். அறிவிலே வித்தியாசம் உள்ளவர்களாய், உயரத்திலும் நிறத்திலும் வேற்றுமை உடையவர்களாய் இனங்களாகப் படைத்தாராம். எப்படி கடவுளின் செய்கை? இந்தச் செய்கையினுலே ஏதாவது நன்மை இருக்கிறதா? அல்லது அறிவுக்குப் பொருத்தமானதா?

உயர்ந்த இனத்தவர்கள்—தாங்கள் தாழ்ந்த இனத் தவர்களாக பிறக்காமல் உயர்ந்தவர்களாய் பிறந்தமையால் கடவுளுக்கு நன்றி செய்யக் கடமைப்பட்டவர்களா?

ஆம்! என்று கூறுவீராஞல், அடுத்த கேள்விக்கும் விடை பகர வேண்டுகின்றேன்.

தாழ்ந்த இனத்தவர்கள் ஏன் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்? அவர்கள் உயர்ந்த இனங்களாக பிறக்காமைக்கு நன்றி செலுத்த வேண்டுமா? அல்லது அவர்கள் மிருகங்களாக இல்லாம லிருப்பதற்காக நன்றி செலுத்த வேண்டுமா?

இவ்விதமான மாறுபட்ட இரு இனங்களைப் படைத்தபோதே கடவுளுக்குத் தெரியாதா, உயர்ந்தவர் தாழ்ந்தாரை அடிமைப்படுத்துவர் என்று! அவர் நன்கு அறிவார் தாழ்ந்தவர் உயர்ந்த இனத்தவருக்கு அடிமை என்று! இருந்தும் படைத்தார்!

தாழ்ந்த இனத்தவர்கள் உயர்ந்த இனத்தவர்களால் தோற்கடிக்கப்பட்டு, முடிவில் அழிக்கப்படுவர் என்று கடவுள் நன்கு அறிவார்; ஆம்! அறிந்தும் படைத்தார்!

இந்தப் படைப்பு முறைகளை, உயர்வு தாழ்வுகளைக் கடவுள்தான் செய்தாரென்றால், இன்றுவரை மக்கள் சிந்திய இரத்தத்தையும், அனுபவித்த துன்பங்களையும் கடவுள் பார்த்துக்கொண் டிருக்கிறார் என்றால், பிணக் குவியல்களால் மூடப்பட்ட நிலங்களையும், இரத்தம் கசிந்து ஒழுகும் முதுகுகளைக் கொண்ட அடிமைகளையும், குழந்தைகளை இழந்து உடைந்துபோன உள்ளங்களையுடைய தாய்மார்களையும் பார்த்தாரென்றால், இவைகளை யெல்லாம் அந்தக் கடவுள் அறிந்தும், பார்த்துக் கொண்டும் இருக்கிறார் என்பது உண்மையானால், இந்தக் கடவுளைவிட கடும் சித்தமுடைய பொறாமைக்கார எதிரி வேறு எவனாவது இருக்க முடியுமா?

அப்படியிருக்க நாம் இந்தக் கடவுளை நல்லவர் என்றும், எல்லாம் செய்ய வல்லவர் என்றும் ஏன் சொல்ல வேண்டும்?

பெருந்தன்மை உடையவர்கள், வீரமிக்கவர்கள், உள்ளமிழந்து பெருமூச்சு விடுமளவு ஒழுக்கம் மிக்க சுவர்களையுடைய குகைகளும், பரிசுத்தமான குருதியால் களங்கமும், புகழும் அடைந்த தூக்கு மேடைகளும், நல்லவர்கள்மீதுள்ள தழும்புகளும், இரத்தத்தைக் கசிந்துகொண் டிருக்கும் முதுகுகளையுடைய ஆதரவற்ற அடிமைகளும் மக்களைக் காப்பாற்ற கடவுள் இல்லை என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

மேலும் நெருப்பிலே துடித்து உயிர் துறந்த மாவீரர்களும், தொழுவிலே மாட்டப்பட்ட உண்மையாளர்களும், கிழித்து எறியப்பட்ட அவர்களின் மூட்டுகளும், தசைகளும், தோலுரிந்து இரத்தம் வடியும் நேர்மையாளர்களின் உடல்களும் மனித இனத்தைக் கட்டிக் காப்பாற்றும் உண்மையான கடவுள் இருக்கவில்லை என்று போதிக்கின்றன.

உண்மையை நாடியவர்கள் இழந்த கண்களும், உண்மைக்காகப் போராடி வீணாக இறந்த எண்ணிலடங்கா தேசபக்தர்களும், அடிபட்டு அழுகின்ற அவர்களின் மனைவிமார்களும், அருமைக் குழந்தைகளின் நடுக்கமுறும் முகங்களும் மக்களுக்கு ஆதரவளிக்கும் கடவுள் இல்லை என்று உபதேசிக்கின்றன.

கடந்துபோன காலங்களில் கொன்று குவிக்கப் பட்ட ஆயிரவர்களும்; காற்றுக்கும், அலைக்கும், வெள் ளத்திற்கும், நெருப்பிற்கும், உலகின் கொடூரச் செயல் களுக்கும், மின்னலுக்கும், எரிமலைக்கும், பஞ்சத்திற்கும், பிளேக் நோய்களுக்கும், இன்னும் அதைப்போல் தாங்க முடியாத வேதனைகளுக்கு ஆளானவர்களும்; இரத்தம் குடித்து குடித்த இரத்தம் வழியும் வாய்களை யுடைய கொடிய மிருகங்களும்; நச்சுப் பற்களும், காயப் படுத்தும் கூர்மையான மூக்குள்ளவைகளும் மனித இனத்தைக் காப்பாற்ற நிச்சயமாகக் கடவுள் இல்லை என்பதைக் கற்பிக்கின்றன.

தவறுகள் வெற்றி பெறுவதும், கொடுங்கோன் மையை நிலைநிறுத்திய முடிகளும் கடவுள் இல்லை என்ப தைச் சுட்டிக்காட்டுகிறது.

உரிமை இந்த உலகத்திலிருந்து விலக்கப்பட்டது என்று ஆவி உருவப் பேய்க்குணக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் குவிந்த இரத்தக் கறை படிந்த கைகளை யுடைய பாதிரிகளும், மதகுருக்களுமாகிய பழைமையின் இந்த ஞாபகச் சின்னங்கள், இன்னும் நிலவி இருக்கும் கொடுமைகள், பயங்கர உண்மைகள் மனித இனத்தைக் காப்பாற்றுவதற்கும், வாழ்த்துவதற்கும் திறனும், திண்மையுமுடைய ஒரு கடவுள் இருக்கிறார் என்று கூறுவதை மறுக்கின்றன.

* • •

3

நேர்மையான சக்தி

அநேகர் இயற்கைக்கு மேலான தொன்றைச் சார்கின்றனர். ஒரு கடவுளை கைவிட்டால், வேறொரு கடவுளைக் கற்பிக்கின்றனர். வளர்ந்திருக்கும் யேகோவாவை வைத்துக் கொண்டு, நேர்மைக்காக வேலை செய்யும் சக்தியைப் பற்றிப் பேசுகின்றார்கள்.

இந்தச் சக்தி என்ன? அதாவது நேர்மைச் சக்தி என்றால் என்ன?

மனிதன் தன் அனுபவத்தால் முன்னேறுகிறான்; அவசியமாக முன்னேறுகிறான்.

ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல விரும்பும் ஒரு மனிதன் வழியே நடக்கிறான். நடந்து அந்தச் சாலை இரண்டாகப் பிரியும் இடத்தை அடைகிறான். எந்த வழி சரி என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியாது ஆகையால் அவன் இடப்பக்கத்துச் சாலைதான் சரியான வழி என்று எண்ணி நடக்கிறான். பின்னர் அந்த வழி சரியல்ல, தவறான வழியில் வந்துவிட்டோம் என்று தெரிந்து வந்த வழியே திரும்பினான். சாலை பிரியும் இடத்தை அடைந்ததும் வலப்பக்கச் சாலை தான் சரியானது என்று எண்ணி நடக்கலானான். அவன் போய் சேரவேண்டிய இடத்தை அடைகிறான்.

இப்போது அவனுக்கு வழி நன்ருகத் தெரிந்து விட்டது. அடுத்த முறை வரும்போது அவன் இடப்பக்கம் நிச்சயமாக போகாமல் வலப்பக்கமே போவான். இடப் பக்கச் சாலை தவறு என்று அவன் எப்படித் தெரிந்து கொண்டான்? அநுபவத்தால் நன்கு உணர்ந்து கொண் டான். சரி, தப்பு இவைகளைத் தெரிந்து கொண்டான்.

இந்த இடத்தில்தான் மதவாதிகள் கூறுகின்றனர் "நேர்மைக்காக வேலை செய்யும் சக்தி ஒன்று இருக் கிறது" என்று!

அழகான விளக்கின் வெளிச்சத்தில் மனதைப் பறிகொடுத்த குழந்தை யொன்று, அந்த விளக்கில் பிரகாசத்தைத் தரும் ஒளியைக் கையால் பிடிக்கிறது. அதனல் அந்தக் குழந்தையின் கை சுடுகிறது. உடனே குழந்தை விளக்கிலிருந்து தன் கையை எடுத்து விடு கிறது. சரியான வழியை—நேர்மையைக் காட்டும் சக்தி குழந்தைக்கு ஒரு பாடம் கற்பித்தது.

இன்று வரையில் உலகில் அனுபவித்து சேர்த்து வைத்திருக்கும் உலக அனுபவம் நேர்மையான ஒரு சக்தி! திறமையும்கூட!

இந்த சக்திக்குப் பெயர் ஞானமல்ல! மனசாட்சியா என்ருல் அதுவுமல்ல!

அந்த நேர்மை சக்திக்கு எந்தவிதமான எண்ண மும் கிடையாது நோக்கமும் இல்லை. அஃதோர் தேர்ந்த பயன்; அனுபவ முடிவு.

ஆனால், ஆயிரக் கணக்கானவர்கள், நமக்கு நேர்மை உணர்வு என்று கூறும் மனசாட்சி ஒன்றுள்ளது என்று கூறி கடவுளின் இருப்பை நிலைநாட்ட முயன்றனர்.

இந்த மதவாதிகளும், தத்துவ வாதிகளும் மேலே கூறப்பட்ட நேர்மை உணர்வு—கடமை உணர்வு—உதவி உணர்வு இவைகள் மனிதனிடம் இல்லாதவை என்றும் எங்கிருந்தோ இறக்குமதி செய்யப் பட்டவை யென்றும் கூறுகின்றனர்.

அத்துடன் மட்டுமா நின்றனர். மனசாட்சி என்பது நம்முடையதல்ல வென்றும் பிறநாட்டுப் பொருளென்றும் வலியுறுத்தினர்கள்.

அந்த மனசாட்சி முதலியவைகள் மனிதனால் உண்டாக்கப் படாதவை யல்ல என்ற அடிப்படையின் மீதுதான் கடவுளைக் கற்பனை செய்தனர். அந்தக் கடவுளிட மிருந்து தான் வந்ததாகச் சொல்லுகின்றனர்.

மனிதன் ஒரு சமூகப் பொருள்; நாம் குடும்பங்களாக வாழ்கிறோம். கூட்டங்களாக — நாடுகளாக வாழ்கின்றோம்.

ஒரு குடும்பம் பல உறுப்பினர்களைக் கொண்டது. வகுப்புகளும் பல அங்கத்தினர்களைக் கொண்டது. நாடுகளும் பல கிளைகளைக் கொண்டது.

அந்த குடும்ப உறுப்பினர்கள், குடும்பங்களின் இன்பத்தை அதிகரிக்கச் செய்தால் அவர்களைப் போற்றுகின்றனர்.

அதைப் போலவே வகுப்புகளின் உறுப்பினர்கள் அந்த வகுப்புகளுக்கு நன்மைகளைச் செய்தால் நல்லவர்கள் என்று புகழப் படுகின்றனர்.

நாடுகளின் அங்கத்தினர்கள் அந்த நாடுகளுக்கு இன்பத்தை அதிகரிக்கச் செய்து நன்மைகளைப் பெருக்கினல் அவர்கள் போற்றப் படுகிறார்கள். நல்ல உறுப்பினர்களாகப் புகழப் படுகின்றனர். எல்லோராலும் மதிக்கப் படுகிறார்கள். அவர்களை நேர்மையாளர்கள் என்றும் கருதுகின்றனர்.

ஆனல்,

குடும்பங்களுக்கும், வகுப்புகளுக்கும், நாடுகளுக்கும் நன்மை புரியாத உறுப்பினர்கள்; தீமையை செய்கின்றவர்கள் மக்களால் குறை கூறப்படுகின்றனர். நிந்திக்கப் படுகின்றனர், சில சமயங்களில் தண்டிக்கப் படுகின்றனர். அவர்கள் அநீதியாளர்களாக—நேர்மையற்றவர்களாக கருதப் படுகின்றனர்.

அதன் பிறகு அந்தக் குடும்பமோ, இனமோ, நாடோ என்ன செய்யும். அவர்களை ஒழித்துவிட்டு ஒரு நிலையான ஒழுங்கை உண்டு பண்ணவும், நேர்மையை நிலைநிறுத்தவும் பாடுபடுகின்றது. இதானே உண்மை? இதில் இயற்கைக்கு அப்பால்பட்டது என்ன இருக்கிறது?

சில பெரியவர்கள் "மனசாட்சி அன்பிலிருந்து பிறந்தது" என்று கூறுகின்றனர்.

உதவி உணர்வும், கடமை உணர்வும் இயற்கையாக உண்டானது என்பதில் ஐயங்கொள்ள வேண்டியதில்லை.

நாகரிக மற்றவர்களின் நடத்தையின் உடன்பயன்களை கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

மனித சமூகம் முன்னேற நெடுந்தூர முடிவுகளும் நன்கு தெரிந்தன நிரந்தர நிகழ்ச்சிதான் உயர்ந்தது என்று தொன்றியது. கற்பனை பழக்கப் பட்டது. மனிதன் தன்னை பற்றி ஆராய்கிறான். கடமை உணர்ச்சி விரிவாகவும், பணியாளாகவும் மாறுகிறது. மனிதன் தனக்குத் தானே—ஆம்! சுயமாகச் சிந்தனை செய்தான்.

மனிதன் அன்பு காட்டுகிறான். அந்த அன்புதான் மிக உயர்ந்த நல்லொழுக்கங்களுக்கு ஆரம்பம்; அடிப்படை.

ஒருவன் ஒருவனை நேசிக்கின்றான். அப்படி நேசிக்கும் உண்மையான நண்பனுக்கு துன்பம் விளைவிக்கின்றான். அவன் அவ்விதம் செய்தமையால் வருத்தம் முண்டாகிறது; பச்சாத்தாபப் படுகிறான்; துயரமடைகிறான்; நேர்மையாளனுகவும் இருக்கிறான். இவைகள் இயற்கையாகவே உண்டாகின்றன. இதிலே இயற்கைக்கு மேலான சக்தி யொன்றுமில்லை!

ஆனால்,

மனிதன் தன்னை ஏமாற்றினன் என்று நினைக்கிறார் கடவுள். அவருக்கு இயற்கை ஒரு கண்ணாடி. அந்தக் கண்ணாடியில் ஏமாற்றப்பட்டவன் உருவம் தெரியும். உடனே அவர் அந்த உருவத்தைப் பிடித்துக் கொண்டார் என்ற போலி எண்ணத்தையே இயற்கையைக் கடந்த மதங்கள் சார்ந்திருக்கின்றன.

ஆத்மார்த்த மனதத்துவ வாதிகள் அதாவது பிளாட்டோ முதல் 'போர்க்' வரை அவர்களின் உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். எல்லா மதக் கண்டு பிடிப்பாளர்களும் அதையே செய்தனர்.

எல்லை யற்ற—ஆதி யந்த மில்லாத—ஒரு கடவுள் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அந்தக் கடவுளுக்காக நாம் என்ன செய்ய முடியும்?

அவர்தான் எல்லை யற்றவராயிற்றே! அவர் எல்லை யற்றிருப்பதால், விதிகள் அற்றவ ரல்லவா?

அவர் விதிகளற் றிருப்பதால், அவருக்கு நன்மையும், தீமையும் ஏற்பட முடியா தல்லவா?

அவர் நன்மையையும் விரும்பமாட்டார், தீமையையும் விரும்பமாட்டார். அந்த விருப்பமே அவருக்கு நிச்சயமாக இருக்காது.

இஃது இவ்வித மிருக்க,

எல்லையற்றப் பரம்பொருள். புகழை விரும்புகிறார் என்ற தற்புகழ்ச்சிக்காரனை—ஆம்! அந்த மனிதனை நினைத்துப் பாருங்கள்!

* * *

4

மதங்கள் என்ன செய்தன?

நம் கிருத்துவர்கள் மற்ற எல்லா மதங்களையும் சாதாரணமாக பொய்யானவைகள் என்று கூறிவிடு கின்றனர். அதை மற்றெல்லா கிருத்துவர்களும் ஏற் றுக் கொள்ளுகிறார்கள்.

ஆகவே, நம் கிருத்துவ மதத்தை மட்டும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசிய மேற்படுகிறது.

கிருத்துவ மதம் நன்மை செய்திருக்கின்றதா ?

கிருத்துவ மதம் மனிதர்களை பெருந்தன்மை யுள்ள வர்களாக்கி இருக்கிறதா ?

அது, மக்களை இரக்க முள்ளவர்களாக்கி யிருக் கிறதா ?

அது, மக்களை நேர்மையாளர்களாகவும், நீதிமான்க ளாகவும் செய்திருக்கின்றதா?

மதக்கோயில் ஆட்சியில் மனிதர்கள் நல்லவர்களாக இருந்தனரா ?

அந்த ஆலயங்களின் ஆட்சி காலத்தில் மக்கள் மகிழ்ச்சியா வாழ முடிந்ததா ?

இந்த கிருத்துவ மதம்? இத்தாலியிலும், ஸ்பெயினிலும் செய்த தென்ன? போர்ச்சுகல், அயர்லாந்து முதலிய நாடுகளில் இந்த மதம் சாதித்த தென்ன?

இந்த மதம் அங்கேரிக்கும், ஆஸ்திரியாவுக்கும் செய்த நன்மை என்ன?

இன்னும், ஆலந்து, ஸ்விச்சர்லாந்து, ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில்—கிருத்துவம் செய்த நன்மை என்ன?

நாம் நேர்மையாக இன்று ஆராய்வோம்.

இந்த நாடுகள் மதமில்லாததால் கெட்டுப்போயிருந்ததா? அல்லது கிருத்து மதத்தைத் தவிர வேறு மதங்களைப் பின்பற்றி யிருந்தால் கெட்டு குட்டிச் சுவராய் போயிருக்கும் என்ற எண்ணமா?

ஜோரோஸ்டரை பின்பற்றி யிருந்தால், 'டோர்க்வே மேட' மிகுந்த கேடு அடைந்திருப்பானா?

அல்லது, தென்கடல் தீவுகளில் உள்ள மதங்களை நம்பி யிருந்தால் சார்லின் அதிக இரத்த வெறி கொண்டிருப்பானா?

டச்சுக்காரர்கள், பிதா மகனை, பரிசுத்த ஆவியை மறுத்துவிட்டு, இறைச்சி, பீர், பாலடைக்கட்டி ஆகிய மும்மூர்த்திகளை வணங்கி யிருந்தால் அவர்கள் அனைவரும் முட்டாள்களாக மாறி விடுவார்கள் என்ற நினைப்பா?

கிருத்துவை விட்டு, கான்பூஸியஸைத் தழுவியிருந்தால் நூன் நாக்ஸ் கேடுற்றிருப்பாரா?

நம் சொந்த—அன்புள்ள—இரக்க மிக்க பியூரிட்டன் பாதிரிமார்களை எடுத்துக் கொள்வோம். அவர்களுக்காக இந்த கிருத்துவ மதம் என்ன செய்திருக்கிறது?

பாவம்! அவர்கள் தங்கள் இன்பத்தையே துறந்து விட்டார்கள். அதுமட்டுமா! பரிதாபத்துக்குரிய அவர்கள் சாவுக் குறியைக் கவனமூட்டும் கறுப்புத் துணியை தங்கள் வாழ்க்கையின் வாயிற்படியில் தொங்க விட்டுக் கொண்டனர். இன்ப மணி யோசைகளை அடைத்து விட்டார்கள்.

மேலும்,

சவப் பெட்டிகளின் மீது, கொஞ்சும் குழந்தைகள் தூங்கும் தொட்டில்களை வைத்தார்கள்.

இந்தப் ப்யூரிட்டன்களின் ஆண்டிலே பன்னிரண்டு டிசம்பர் மாதங்கள் இருந்தன.

இவர்கள் குழந்தை பருவத்தை ஒழிக்கவும், இளமையைக் கிண்டல் செய்து வெறுக்கவும், குழந்தைகளின் மழலை மொழிகளை வேண்டாம் என்று சொல்லவும், காலைப்பாட்டைத் தடுக்கவும் முயன்றனர்.

இந்தப் ப்யூரிட்டன்கள் மதம் ஒரு பழுதில்லாத சாபம்! அவர்கள் வேத புத்தகத்தை கடவுளின் வாக்கு என்று நம்பினர்.

அந்த நம்பிக்கைதான், அது கொடுமை, கேவலம் என்று எண்ணும் மக்களை உண்டாக்கியது.

வட அமெரிக்க இந்தியரின் மதத்தை இந்த ப்யூரிட் டன்கள் தழுவி யிருந்தால் அவர்கள் கேடுற்றிருப்பார் களா?

மக்களிடம் வேதநூல் எப்படி செல்வாக்கு பெற் றிருந்தது. அந்தப் பாழான நம்பிக்கையின் செல்வாக்கு எப்படிப்பட்டது என்பதை விளக்க உங்களுக்கு ஒரு உண்மை நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறேன்.

எலிசபத் மகாராணி முடி சூட்டிக்கொண்ட காலத் தில், உண்மையையும், காலத்தை குறிப்பிடக் கூடிய அறிவு முதிர்ந்த ஒருவர் ஜெனீவா வேத நூலொன்றை எலிசபத் பேரரசி பட்டம் சூட்டிக் கொண்டபோது கொடுத்தார். அதை அன்புடன் பெற்றுக் கொண்ட அரசியார், அந்த அரிய நூலை முத்தமிட்டார். அதிலுள் ளவைகளை மிகவும் சிரத்தையுடன் படிப்பதாக உறுதி கூறினுள். அத்துடன் நின்றுவிடவில்லை. அடுத்தும் ஒன்று கூறினுள். "இந்த அரிய புண்ணிய நூலைச் சந் தேகிக்கும் கிருத்துவர்களை வாளுக் கிரையாக்குக" என்பதாகும்.

இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பாருங்கள்! இதி லிருந்து நமக்கு என்ன தெரிகிறது. ஆம்! புராட்டஸ் டண்ட் வேத நூல் பிரியர்களின் உண்மையான உள் ளம் தெரியவில்லையா?

இதனை வேறு விதமாகக் கூறவேண்டுமானால் சந்தோஷமடைய உள்ளம் எப்படி இருந்ததோ அப்படியே பேய்க்குணம் படைத்ததாய் புகழ் குன்றியும் இருந்தது.

இன்னும் இந்த வேத நூல் ஜியர்ஜிய மக்களை அன்பாக வைத்திருந்ததா? அல்லது இரக்கமாகவாகிலும் இருக்கச் செய்ததா?

இவ்விதம் எதையும் விசாரணை செய்யாமல் தண்டிப்பவர்கள் கல்லை வணங்கினால், மரத்தை வணங்கினால், இதைவிட அதிக கொடூரமான காரியங்களைச் செய்து விடுவார்களா? அவர்கள் உள்ளம் இதைவிடக் கொடூரமாக இருக்கும் என்று எண்ண முடியுமா?

5

மதமின்றி மனித இனத்தை எப்படித் திருத்துவது என்று கேட்கிறார்கள்.

நாம் அவர்களுக்குப் பதில் [சொல்லித்தான் ஆக வேண்டும்.

எல்லா நாடுகளும், எல்லாக் காலங்களிலும் மதத்தின் துணையினால் தான் முயன்றிருக்கிறது. ஆனால் ஒரு காலத்திலும், ஒரு நாடாகிலும் வெற்றி பெறவில்லை. தோல்வியே அடைந்தது.

மதம் என்ன செய்தது?

மனிதனுக்கு இரக்கத்தைக் கற்பித்த துண்டா? நிச்சயமாக இல்லை.

விசாரணை செய்யும் எண்ணத்தை வலுப்படுத்தியதா? இல்லை.

அடிமைத்தனத்துக்கு இந்த மதம் என்ன செய்தது?

லிப்பி, சால்ஸ்பரி, ஆர்டர்சன் வில்பிக்கு மதம் செய்த தென்ன? ஒன்றும் செய்யவில்லை.

இந்த மதம் அறிவின் எதிரி, ஆராய்ச்சியின் விரோதி; சிந்தனையின் பகைவன்.

மதம் மனிதனுக்கு விடுதலையை வழங்கியதா? இல்லை.

மதம் மனிதனை நேர்மையாளனாக இருக்கவாகிலும் அனுமதித்ததா?

மனிதனை சிரத்தை உள்ளவனாக இருக்கவாகிலும் விட்டதா?

அல்லது மனிதன் உண்மையானவனாக இருப்பதை யாகிலும் பார்த்துச் சகித்ததா? இல்லை.

அநாகரிகர்கள் என்று சொல்லப்படுகின்றனரே அவர்களைவிட கிருத்துவர்கள் நேர்மையாளர்க ளாகவும், உண்மையாளர்க ளாகவும் இருக்கின்றனரா?

இல்லை. அவர்களும் அப்படியில்லை. பிறர் இருப் பதையும் விரும்புவதில்லை.

அநாகரிகமானவர்கள் செய்யும் குற்றங்களுக்கும், கொடுமைகளுக்கும் காரணம் என்ன என்ற கேள்வி எழும்போது, அதற்குக் காரணம் அவர்களின் மூட பக்தி என்று நாம் சொல்ல முடியாதா?

யார் இயற்கையின் மீது நம்பிக்கை கொள்கிறார் களோ அவர்களுக்கு மதம் அப்பாற் பட்டது.

நண்பர்களே சிந்தித்துப் பாருங்கள்!

வெறும் பிரார்த்தனையினால் இயற்கையை கெடுத்து விட முடியுமென்று நினைக்கிறீர்களா? அல்லது பொருள்

களின் குணங்களை தியானத்தால் மாற்றிவிட முடியு மென்று கருதுகிறீர்களா?

நமது துன்பங்களை விரைவு படுத்தவும், குறைக்க வும் வழிபாட்டால் முடியுமென்று நினைக்கிறீர்களா?

உயிர் பலியின் உதவியால் காற்றை மாற்ற முடி யுமா?

முழங்கால் மண்டியிட்டு பணிவதால் நாம் செல்வச் சீமானுவோம் என்று கருதுகிறீர்களா?

வெறும் முறையீட்டால் நமது வியாதிகள் நம்மை விட்டு விரைந் தோடிவிடும் என்று எண்ணலாமா?

சடங்குகளின் மூலம், அறிவை வளர்க்க முடியுமா?

நாம், நேர்மையை.பிச்சையாக பெறமுடியுமா?

மேன்மையை விலைக்கு வாங்க இயலுமா?

பொரு ளுலகத்தில் விடா முயற்சியால் உண்டாக் கிய—கண்ட உண்மைகளைப் போன்றது தானே மன உலகத்து உண்மைகளும்?

சாதாரணமாக நமது உடம்பை என்னவென்று அழைக்கிறோமோ? அது போலன்றோ நம் அறிவை அழைப்பதும்?

ஆனல்,

மதம் என்ன கூறுகிறது?

இயற்கைக்கு ஓர் அதிகாரி உண்டு என்ற எண்ணத்தைச் சார்ந்திருக்கிறது. அந்த எஜமான் பிரார்த்தனைகளை கேட்கிறார், தியானம் செய்யச் சொல்லுகிறார், ஜபமாலையை எண்ணப் பணிக்கிறார். அப்படிச் செய்யாதவர்களைத் தண்டிக்கிறார். செய்தவர் களுக்குப் பரிசளிக்கிறார்.

மேலும்,

அவர் புகழை விரும்புகிறார், போற்றுதலை எதிர்பார்க்கிறார்.

ஆனால்,

சுதந்திர வீரர்களை வெறுக்கிறார்.

அன்புள்ளவர்களே!

வான மண்டலத்தி லிருந்து மனிதன் எந்த நன்மையேனும் அடைந்ததுண்டா?

* * *

6

நாம் ஒரு கொள்கையை உண்டாக்கினல் அதற்கு ஒரு அடிப்படை உண்மை நிச்சயமாக இருக்க வேண்டும்.

அதைப் போலவே வேறு கொள்கைகளை யார் கூறினலும் நான் அதன் அடிப்படை உண்மை என்ன வென்று கேட்க வேண்டும். இந்த மூளை நமக்கு நிச்சய மாக இருந்தாக வேண்டும். ஒவ்வொரு உண்மைக்கும் நான்கு மூளைகள் வேண்டும்.

நமது நம்பிக்கை என்னும் கோட்டையை—உத்தே சங்களின் மீது கட்டக் கூடாது; பகட்டுகளின் மீதும் எழுப்பக் கூடாது; இசைவுகளின் மீதும், யூகங்களின் மீதும் நமது நம்பிக்கை கோட்டைகளை கட்டக் கூடாது.

நாம் ஒரு கட்டிடம் கட்டுவதானல் கீழே தோண்டி நல்ல பலமான அடிப்படையை உண்டாக்கிய பின்னர் தான் கட்ட முயல்கின்றோம். அதைப் போலவே நமது நம்பிக்கைகளின் அடிப்படை என்ன என்று கீழே சென்று கண்டு பிடித்தாக வேண்டும்.

நான் ஒரு எண்ணம் வைத்திருக்கிறேன். நான்கு மூலையில் நான்கு கற்கள் வைத்திருக்கிறேன். அதன் விளக்கமாவது:—

முதற் கல்:— "பொருள்", அழியாது, அழிக்க முடியாதது, ஒழியாதது ஒழிக்க முடியாதது.

இரண்டாங்கல்:—சக்தி—அழியாதது, அழிக்க முடியாதது; ஒழியாதது, ஒழிக்க முடியாதது.

மூன்றுங்கல்:— பொருளும், சக்தியும் இணைந்தது; அதாவது பொருளும் சக்தியும் தனித் தனியாக இருக்க முடியாது; பொருளின்றி சக்தியில்லை; சக்தியின்றி பொருளில்லை.

நான்காம்கல்:— அஃது அழிக்க முடியாதது; படைக்க முடியாதது. அஃது அழிவில்லாதது; படைப்பில்லாதது.

இவையே நான்கு மூலைகள். இந்த மூலைகள் உண்மையாயின், பொருளும் சக்தியும் நிலையானவை என்று புலனுகிறது. அத்துடன் அவை அதிகப்படுத்தவும், குறைக்கவும் முடியாது.

இவை "யாராலும் படைக்கப்படவில்லை. படைக்கப்படவும் முடியாது; எப்போதும் ஒரு படைப்பாளன் இல்லை; இருக்கவும் முடியாது" என்ற உண்மையை நன்கு உணர்த்துகிறது.

அத்துடன் பொருளின், சக்தியின் எத்தகைய அறிவும், மாதிரியும் இருந்திருக்க முடியாது என்றும் குறிப்பிடுகிறது.

சக்தியின்றி அறிவு இல்லை; பொருளின்றி சக்தியில்லை. அதனால் பொருளுக்குச் சார்பாக அறிவும் சக்தியும் இருக்க முடியாது.

இவைகளிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது.

அதாவது, இயற்கையைக் கடந்த சக்தியொன்றும் இல்லை. இருக்க முடியாது, என்று ஏற்படுகிறது.

அந்த நான்கு மூலைகற்கள் உண்மையாயின் இயற்கைக்கு எஜமான் கிடையாது.

பொருளும், சக்தியும் ஆதிமுதல் அந்தம் வரையில் நிரந்தர மானவையானல் கடவுள் ஒருவர் இல்லை என்பது ஏற்படுகிறது.

அதுமட்டுமா:

கடவுள் உலகைப் படைத்தார் என்பது பொய். அவர் படைத்த உலகை அவர் ஆள்வதாக கூறப்படுவதும் பொய். கடவுள் உலகத்தைப் படைத்து ஆளவில்லை என்பது மெய்.

பிரார்த்தனைகளுக்கு இரங்கி பதவிகளை அளிக்கும் கடவுள் இல்லை. அப்படி கூறுவது பொய்! அத்தகைய கடவுள் இல்லை. இது மெய்.

மக்களை வதைப்பவர்களுக்கு உதவி புரியும் கடவுள் இல்லை. அப்படி இருப்பதாகச் சொல்லப்படுவது பொய்! அத்தகைய கடவுள் இல்லை. இது மெய்!

அறியாத மக்களின் வேதனைகளைக் கேட்டு இரக்கம் காட்டும் கடவுள் இல்லை. அப்படி இருப்பதாக கூறப்படுவது பொய்!

அடிபட்டு அடிபட்டு தழும்பேறிய தசைகளை யுடைய அடிமைகளைப் பற்றிக் கவலைப்படும் கடவுள் இல்லை. இருப்பதாகச் சொல்வது சுத்த பொய்!

குழந்தைகளை இழந்து துடிக்கும் தாய்மார்களைப் பற்றிக் கவலை கொள்ளும் கடவுள் இல்லை. இருப்பதாக சொல்வது பொய்!

தொல்லைகளை துயரத்தைப் போக்கி அவர்களைக் காப்பாற்றும் கடவுள் இல்லை. இருப்பதாகச் சொல்லப் படுவது பொய்!

திக்கற்று தீயிலே வேகும் தீரர்களைக் காப்பாற் றும் கடவுள் இல்லை இருப்பதாகச் சொல்வது பொய்!

ஆம்! மனிதன் விண்ணுலகத்தி லிருந்து எப் போதும் எந்த உதவியையும் பெற்றதில்லை. இஃதே மெய்!

அன்புள்ளவர்களே!

பலி எந்தவிதமான பயனையும் தந்ததில்லை அவை வீணுயின.

எல்லா ஆதாரங்களும் இலட்சிய மற்றக் காற்றில் மறைந்து ஒளிந்தன!

நான் பாசாங்கு செய்வதாக நினைக்க வேண்டாம். நான் நினைத்ததை—சிந்தித்ததை—அறிந்ததை சொல் கிறேன்.

பொருளும் சக்தியும் நிரந்திரமானவை. இஃது உண்மையானல் இவைகள் சேர்ந்திருப்பதால் என்ன

இயற்கையாய் நடக்க முடியுமோ அவையே நிகழ்ந்தன. இப்போது என்ன முடிகிறதோ அவை நிகழ்கின்றன. இனியும் என்ன முடியுமோ அவையே நிகழும் என்று நமக்குத் தெரிகின்றது.

இந்த உலகில் எதுவும் எங்கிருந்தும் வந்து வாய்த்து விடாது. சபல நினைவுகளின்படி எதுவும் நடை பெறுவதில்லை.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும், ஆதாரம் உண்டு! எல்லா நிகழ்ச்சிகளுக்கும் உறைவிடமுண்டு!

எவை எவை நிகழவேண்டுமோ அவை இயற்கையாக நிகழும். எவை நிகழ வில்லையோ, நிகழாதோ அவை நிச்சயமாக நிகழாது. தற்காலம், இறந்த காலத்தின் உற்பத்தி; நிகழ் காலத்துக்குக் காரணம்.

முடிவு இல்லாத சங்கிலி விலங்கில், உடைந்த, தவறிய சங்கிலி நிச்சயமாக இல்லை; இருக்க முடியாது.

ஒவ்வொரு நட்சத்திரத்தின் உருவமும், அசைவும், ஒவ்வொரு உலகின் தட்ப வெப்ப நிலையும், எல்லா வகைத் தாவரங்களின் வளர்ச்சியும், எல்லாவித மிருக வாழ்க்கையும், இயற்கை அறிவும், விவேகமும், மனசாட்சியும், ஏற்புக்கள், மறுப்புக்களும், தவறுகள் நீதிகளும், எல்லா எண்ணங்களும், நினைவுகளும், கனவுகளும் நம்பிக்கைகளும் அச்சமும் இன்றியமையாதவை. அளவு கடந்த பொருள்களிலும், பொருத்தங்களிலும், ஒன்றேனும் உலகில் வித்தியாசமா யிருந்திருக்க முடியாது.

* * *

7

பொருளும், சக்தியும் நிரந்தரமானவை என்பது உண்மையானல், மனிதனுக்கு அறிவாயுதத்தைப் படைத்தவன் இல்லை என்பது தெரிகிறது. மனிதன் ஒரு தனி படைப்பு என்று கூறுவதும் பொய் என்று நாம் கூறலாம்.

மேலும்,

யேகோவா என்னும் தெய்விகக் குயவன் மண்ணிலே செய்த ஆண், பெண் உருவங்களுக்கு உயிர் அளித்ததாக கூறப்படுவது உண்மை அல்ல என்றும் நாம் இப்போது உணர்கிறோம்.

அன்றியும் நமது ஆதி பெற்றோர்கள் வேறு நாட்டவர்கள் அல்ல வென்றும் இப்போது அறிகிறோம். அவர்கள் இந்த உலகில் உண்டான குடிமக்கள் என்றும், அவர்களுடைய உயிர் எந்தக் கடவுளுடைய மூச்சிலிருந்தும் வரவில்லை என்றும் அறிகிறோம்.

இப்போது நாம் முழு உண்மையை உணர்கிறோம். அதாவது இவ்வுலகம் இயற்கையானது. ஆண், பெண் அனைவரும் இயற்கையாகவே உண்டாயினர் என்றும் இப்போது அறிகிறோம்.

நாம் நமது முன்னோர்களை வம்சா வாரியாக இப்போது அறிய முடியும். நமக்கு குடும்ப மரம் உண்டு.

நாம் சங்கிலியின் எல்லா இணைப்புகளையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

நாம் வியாபாரங்களை நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளவில்லை.

புதையுண்ட பொருள்களின் உண்மைகளும், வாழ்கின்ற உருவங்களும் நம்மிடமுள்ளன.

கவனிப்பற்ற உருவத்திலிருந்து — குருட்டுணர்ச்சியிலிருந்து—உறுப்பு வளர்ச்சியிலிருந்து—புரியாத விருப்பத்திலிருந்து, ஒற்றை யோட்டு உடம்பும், நீர் நிறைந்துள்ள பந்துபோன்ற உருவும், இரண்டு கவர்களுடைய ஒரு கோப்பை போன்ற உருவும், தட்டைப்புழு உருவும், மூச்சு இழுக்கும் உருவும், முதுகெலும்புள்ள உருவும், முதுகெலும்பில்லாத உருவும், இவ்விரண்டுக்கும் தொடர்புள்ள உருவும், மண்டை யோடுடைய உருவும், சிறகுடைய உருவும், முன் பின் சிறகுடைய உருவும் ஊர்கிற மூலையூட்டும் பிராணிகளும்; அதாவது, ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன முதலானவைகளும், புல்லும், பூண்டும், புழுவும், மிருகமும், பறவையும், பாம்பும், அதன் பின்னர் மனிதனும் ஆக வளர்ந்து வந்த உயிரின் வளர்ச்சியை நாம் அறிவோம்.

இந்த முன்னேற்றத்தின் அடிச்சுவடிகள் நமக்குத் தெரியும்! அவை கண்டுபிடிக்கப் பட்டன. கடைசி இணைப்பும் காணப் பட்டது. இந்த அரிய கண்டு பிடிப்புக்காக நாம் எல்லாரையும்விட, மிக உயர்ந்தவரான "உயிரியலறிஞர் எர்ன்ஸ் ஏக்கல்" என்பவருக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

நாம் இப்போது உலகம் இயற்கை என்று நம்புகிறோம். இயற்கைக்கு மீறிய சக்தியை மறுக்கிறோம்.

o o o

8

இந்த உலகத்தை திருத்த பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஆண்களும், பெண்களும் முயன்று கொண்டிருக்கின்றனர். அந்த மனிதர்கள் தெய்வங் களைப் படைத்தனர்; பிசாசுகளை உண்டாக்கினர்; தேவலோகங்களை ஆகாயத்திலும், நரக லோகங்களை பாதாளத்திலும் சிருஷ்டித்தனர்.

இன்னும், புண்ணிய ஏடுகளை எழுதிவைத்தனர்; அற்புதங்களைச் செய்தார்கள். பெரிய பெரிய கோயில் களைக் கட்டினார்கள், கோபுரங்களை உயர்த்தினார்கள், அத்துடன் இருட்டறைகளை உண்டாக்கினார்கள், சிறைச்சாலையும் கட்டினார்கள்.

மேலும்,

அரசர்களுக்கும், அரசிகளுக்கும் மகுட மணிமுடி தரித்தார்கள். முடியைதள்ளிவிட்டு வேடிக்கையும் பார்த் தார்கள். அவர்கள் துன்பப் படுத்தினார்கள்; சிறையி லடைத்தார்கள்; உயிடன் தோலுரித்தார்கள்,உயிருடன் கொளுத்தினார்கள்.

அத்துடன் நின்றுவிடவில்லை.

அவர்கள் உபதேசம் செய்தார்கள், பிரார்த்தனை செய்தார்கள்; வாக்குறுதிகளாலும், பயமுறுத்தல்களா

லும் தங்களை காப்பாற்றிக்கொள்ள முயன்றூர்கள். முகமன் கூறினூர்கள், ஏய்தார்கள், பரலோக ஆசையைத் தூண்டினூர்கள், அதை உபதேசித்தார்கள், அதையே அனைவருக்கும் போதித்தார்கள்.

மக்களை உண்மையாக இருக்க அறிவில்லா முறைகளைக் காட்டினூர்கள். மிதமாக இருக்க தேவையற்ற வழியை காட்டினூர்கள்; ஊக்கமாயிருக்க முட்டாள்தனமான வழியைக் காட்டினூர்கள். நேர்மையாக இருக்க பொய்யான வழியைக் காட்டினூர்கள்.

அவர்கள், மருத்துவச் சாலைகளை கட்டினூர்கள்; புகலிட விடுதிகளை தோற்றுவித்தார்கள். பல்கலைக் கழகங்களையும், பாடசாலைகளையும் நிறுவினூர்கள்.

மனித இனம் சுகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க அவர்களுக்குத் தெரிந்த அவர்களாலியன்ற வரை முயன்றூர்கள்.

எனினும் அவர்கள் வெற்றி பெறவில்லை.

ஏன் அவர்கள் வெற்றி பெறவில்லை?

சீர்த்திருத்த வாதிகள் தோன்றினர்?

ஏன் சீர்த்திருத்த வாதிகள் தோன்றினர்?

அதற்கு காரணங்களை நான் சொல்லுகிறேன்.

அறியாமை, ஏழ்மை, அதர்மம், இவைகள் உலகை நிரப்புகின்றன.

சாக்கடை ஒரு குழந்தை வளர்ப்பு இடமாக இருக்கிறது.

மக்கள் தாங்கள் பெற்றக் குழந்தைகளை, தங்கள் வீடுகளில், குடிசைகளில், சிற்றில்லங்களில் நிரப்ப முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஏன் தெரியுமா ?

பாவம் ! அவர்கள், கடவுள், அதிருஷ்டம், தர்மம் என்பனவற்றைச் சார்ந்திருக்கின்றனர்.

அ வ ர் க ள் , பயன்களையும், பொறுப்புகளையும், உணரத்தக்க அறிவாளிகளாக இல்லை. அதே நேரத்தில் அவர்கள் குழந்தைகளை விரும்பவில்லை.

ஏன் அவர்கள் குழந்தைகளை விரும்ப வில்லை? குழந்தைகளைப் பெறுவது சா ப ம்! பெறுபவர்களுக்கும் குழந்தைகளுக்கும் சாபம் எ ன் ற எண்ணமுடையவர்கள்.

அப்போதெல்லாம் குழந்தைகள் வரவேற்கப்படவில்லை. அஃதோர் பெரும் பாரம் என்றும் எண்ணினர் அதுவே காரணம்.

இதனால், மக்களால் வரவேற்கப்படாத குழந்தைகள், சிறைகளையும், ஆதரவு விடுதிகளையும், மருத்துவ விடுதிகளையும், தூக்குமேடைகளையும் நிரப்புகின்றன.

இருப்பினும், ஒரு சில குழந்தைகள், சந்தர்பங்களாலும், இரக்கத்தாலும் காப்பாற்றப் படுகின்றன. ஆனால் பெரும் பான்மை தோல்விதான். அவர்கள் அதர்மவான்களாகவும், கொடுங்கோலர்களாவும் மாறுகின்றனர்.

அப்படி மாறியே அவர்கள் எவ்விதம் வாழ்கிருர்கள்?

ஏமாற்றுதலாலும், கொடுமையாலுமே வாழ்கின்றனர். இப்படி இவர்கள் வாழ்ந்த பின்னர் அவர்களின் மக்களுக்கும் அதே தவருன குணங்கள் படிகின்றன.

இவ்விதமான அதர்ம வெள்ளத்திற்கு எதிரே சீர்திருத்தச் சக்திகள் பயனற்றவை யாகின்றன.:

ஆம்! தரும குணமே தானறியா வண்ணம் குற்றங்களை உற்பத்தி செய்கிறது.

தோல்வி இயற்கையின் வியாபார லேபில் போலும்!

இயற்கைக்கு வரைபடமும், நுண்ணறிவுமில்லை. இயற்கை நோக்கமின்றி உற்பத்தி செய்கிறது. எண்ணமின்றி காப்பாற்றுகிறது. சிந்தனையின்றி அழிக்கிறது.

ஆனல்.

மனிதனுக்கு சிறிது அறிவு உண்டு! வஅன் அதை உபயோகப்படுத்த வேண்டும்.

மனித இனத்தை உயர்த்துவதற்குரிய செம்பு கோல் அறிவு ஒன்றுதான்.

உண்மையான கேள்வி ஒன்று இருக்கிறது. அது:- நாம் அறியாத, ஏழையான, அதர்ம மக்களை, உலகத்தைக் குழந்தைகளால் நிரப்புவதிலிருந்து தடுக்க முடியுமா?

நாகரிகம் என்னும் 'மிஸிஸிபி'யிலிருந்து, அறியாமை அதர்மம் என்னும் 'மிஸ்ஸௌரி'யைத் தடுக்க முடியுமா?

இவ்வுலகம் எப்போதும் அறியாமை உணர்ச்சியால் பாதிக்கப்பட்டதாகவே இருக்க வேண்டுமா?

இந்த உலகம் எல்லாராலும் கவனிக்கப்படும் அளவுக்கு நாகரிகமாக்கப் படுமா?

ஆண்களும் பெண்களும், கவலைப்படாத குழந்தைகளை—'பாவம்' என்றும், 'பாரம்' என்றும் கூறப்படும் குழந்தைகளை உடையவர்களாக இருக்கின்றனரே! அஃதேன்?

ஏனெனில், அவர்கட்கு அறிவுக்கும், மனச்சாட்சிக்கும், சிந்தனைக்கும் மீறிய எழுச்சி உண்டு, அதனால்.

இந்த மக்களை நீ பேச்சால் திருத்த முடியாது; விளக்கங்கள் கூறி திருத்த முடியாது; உபதேசங்களாலும், சமயக் கோட்பாட்டாலும் திருத்த முடியாது.

மனித உணர்ச்சி, எழுச்சி எப்போது செத்துப் போய் இருந்தது? இருக்கப் போகிறது?

ஆகவே மேற்கூறிய முறைகளைக் கையாண்டு சீர்திருத்த முடியாது. அவைகள் உபயோகமற்றவை.

நாளுக்குநாள் குற்றவாளிகள் பெருகுகின்றனர். காலாடிகளும், பிச்சைக்காரர்களும் அதிகமாகின்றனர். தோல்விகள் அதிகரிக்கின்றன.

இதனால் காவல் அறைகள் அதிகமாகின்றன; சிறைச்சாலைகளின் எண்ணிக்கை கூடுகிறது. ஏழை விடுதிகளும், அனாதை விடுதிகளும் நிரம்புகின்றன.

மக்களை எவை திருத்தும்? மதம் திருத்துமா? நிச்சயமாகத் திருத்தாது. மனிதனுக்கு எந்த உதவியும் செய்யாது.

சட்டம் என்ன செய்யும்?

குற்றவாளிகளைத் தண்டிக்கும்; ஆனால் அவை குற்றவாளிகளைத் திருத்தாது; குற்றங்களைக் குறைக்கவும் செய்யாது.

இதனால்,

அதர்ம அலைகள் மிக உயரத்தில் கிளம்புகின்றன.

இருள் கவிந்த இரவோடு, நெருப்புப் பூச்சிகள் போராடுகின்ற பயனற்ற போர் போன்ற நூதன தீய சக்தியை எதிர்த்து தற்போது நிகழ்கின்றது யுத்தம்.

ஒரே ஒரு நம்பிக்கைத்தான் நமக்கு இருக்கிறது. அதாவது அறியாமை. ஏழ்மை, அதர்மம் இவைகள் உலகில் குடிகொள்ளக்கூடாது.

இந்த அரிய காரியத்தை செய்துமுடிக்க நேர்மை எண்ணத்தால் முடியாது.

உதாரணங்களைக் காட்டிப் பேசும் பேச்சு வன்மையாலும் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியாது.

மதங்களால் முடியாது; சட்டங்களாலும் முடியாது.

N53

மதக் குருமார்களாலும் முடியாது; தூக்குமேடைகளாலும் முடியாது.

இந்த அரிய காரியத்தைச் சாதிக்க இயற்கையாலும் முடியாது; உண்மைச் சக்தியாலும் முடியாது.

ஆனால்........

இந்த அரிய காரியத்தைச் செய்து முடிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு!

அஃதே விஞ்ஞானம்.

அந்த விஞ்ஞானம் மாதர்களைச் சொந்தக்காரர்களாக்க வேண்டும்; எஜமானிகளாக ஆக்கவேண்டும்.

மனித இனத்தின் ஒரே ஒரு பாதுகாவலனான விஞ்ஞானம் ஒரு பெண்ணை, 'தான் தாயாக வேண்டுமா? வேண்டாமா' என்று சிந்திக்க வைத்து, அவளையே முடிவுகட்டச் செய்யவேண்டும்.

இதுதான் உங்கள் முழு கேள்வியின் மூலம்; அதுதான் பெண்ணை விடுவிக்கிறது. அப்போதுதான் அவர்கள் பெற்ற குழந்தைகள் வரவேற்கப்படுகின்றனர். அந்தக் குழந்தைகள் மகிழ்ச்சி கரங்களால் இன்ப மார்போடு அணைக்கப் படுகின்றன. இந்தக் குழந்தைகள்தான் வீடுகளில் மகிழ்ச்சியையும், ஒளியையும் நிரப்பும்.

சுதந்திர புருடர்களைக் காட்டிலும் அடிமைகள் வெண்மையாகவும், உண்மையாகவும் இருக்கிறார்கள் என்று நம்புகின்ற ஆண் பெண்கள்,

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 2336

அறிவைக் காட்டிலும் அச்சம் பாதுகாப்பான வழியென்று நம்புகிற ஆண் பெண்கள்,

மற்றவர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றவர்களே நல்லவர்கள் என்று நம்புகிற ஆண் பெண்கள்,

அறியாமை நிலத்தில் பூர்ண வாசனை மலர்கள் வளர்வதாக நம்புகிற ஆண் பெண்கள்,

அதிர்ச்சியடைந்த அவர்களின் முகங்களைக் கைகளால் மூடிக்கொள்வார்கள்!

ஒளி நேர்மையின் எதிரி என்றும், இருளில் பெண்மை வாழ்கிறது என்றும், அவர்களின் வாழ்வைப் பாதிக்கிற இயற்கையின் உண்மைகளையும், அவர்களையும் அறிந்துகொள்வது மனித குலத்துக்கோர் ஆபத்து என்றும் கருதும் ஆண் பெண்கள் மன எழுச்சியின் எஜமானனுக அறிவை காக்கும் எண்ணத்தில் அச்சுறுத்தப்படுவர்.

அறிவின் சிந்தனையாலும், விவேகத்தின் நேர்மையாலும் ஆண் பெண்கள், நோய்களையும், வலிகளையும் நிலைத்திருக்கச் செய்ய மறுக்கும், உலகத்தில் தோல்விகளை நிரப்ப மறுக்கும் காலத்தை எதிர் நோக்குகின்றேன்.

ஆம்! தோழர்களே அறிவால் நோய்களை நீக்கும் நல்ல காலத்தை 'எதிர் பார்க்கின்றேன், நேர்மையான

காலத்தை எதிர் பார்க்கின்றேன். உண்மை வெற்றி பெறும் உன்னத காலத்தை எதிர் பார்க்கின்றேன்.

அந்தக் காலம் வரும்போது, சிறைச் சுவர்கள் இடிந்து விழுந்து ஒழியும்.

அந்த நல்லகாலத்தில் இருட்டறைகள் விளக்கொளியால் நிரப்பப் பெற்று பிரகாசமாய் விளங்கும்.

அந்த நல்ல காலத்தில், தூக்கு மேடைகளின் நிழல் பூமியைச் சபிப்பதை நிறுத்தும். இகலோக வாழ்வு நன்று என்று வாழ்த்தும்.

அந்த நல்ல காலத்தில் ஏழ்மை இருக்க இடமின்றி அலைந்து ஒழியும்.

குற்றங்கள் மறைந்து குணங்கள் மலரும் அந்த நல்ல காலத்தில், மக்களின் குறைபாடுகள் சந்ததியற்றவையாகி விடும்.

தேவையின் வறண்டகைகள் பிச்சைக்காக நீட்டப் பட மாட்டது.

அப்போது உலக முழுவதும் அறிவொளி வீசும்! நேர்மை விளங்கும்! நீதி யோங்கும்! உரிமை மலரும்.

* * *

9

மதம் மனித இனத்தைத் திருத்தாது. ஏனெனில் மதம் அடிமைத்தன முடையது.

சுதந்திரமாக இருப்பது அச்சத்தின் கோட்டைகளை தூளாக்குவது. வாய் விலங்குகளை கழற்றி விடுதலை தருவது. எதிர் காலத்தை உறுதியாக நின்று புன்சிரிப்புடன் நோக்குவது மிகவும் நல்லது.

சில சமயங்களில் அசட்டையாக இருப்பதற்கும், உலக சக்தியோடும், அலையும் திரையோடும் மிதப்பதற்கும், எண்ணிக் கனவு காண்பதற்கும், வாழ்வின் விலங்குகளையும், எல்லைகளையும், நினைப்பதற்கும் பழைய நோக்கங்களையும், எண்ணங்களையும் மறப்பதற்கும், உங்களைப் பக்குவப் படுத்திக் கொள்வது மிகவும் நல்லது.

மூளையின் பீடத்தில் அமர்ந்திருப்பதற்கும், இறந்த காலத்தின் முத்தங்களையும், தழுவல்களையும் மீண்டும் உணர்வதற்கும், இறந்தவர்களின் உருவங்களையும் முகங்களையும் பார்ப்பதற்காக வாழ்வின் ஆரம்பத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும் உங்களைப் பக்குவப் படுத்திக் கொள்வது மிகவும் நல்லது.

வரப் போகிற ஆண்டுகளுக்காக நல்ல படங்களைத் தீட்டுவதற்கும் எல்லாக் கடவுள்களையும், வாக்குறுதிகளை

யும், அச்சுறுத்தல்களையும் மறப்பதற்கும், வாழ்வின் இன்ப ஓடையை உங்களுடைய இரத்தக் குழாய்களிலே உணர்வதற்கும், புருட சங்கீதத்தையும், உம் அச்சமற்ற இருதயத்தின் தாளக்கட்டான துடிப்பையும் கேட்பதற்கும், உம்மை பக்குவப் படுத்திக் கொள்வது மிகவும் நல்லது.

பயன் அளிக்கும் எல்லா காரியங்களையும் செய்யவும், மனித அறிவின் நோக்கத்தைச் சிந்தனையாலும், செய்கையாலும் அடைவதற்கும் சாதாரணமாக பயனற்றப் பொருள்களில் கலையின் அமிழ்தத்தைக் காண்கின்ற மனோபாவத்தைத் துறப்பதற்கும், அனுபவ நிறைந்தக் கண்களுடன், உண்மையைக் காண்பதற்கும், அறிவைப் பெருக்குவதற்கும், எளியவர்களின் பாரத்தை போக்குவதற்கும், மூளையை வளர்ப்பதற்கும், நேர்மையை காக்கவும் உயிர்க்கு அழகிய அரண்மனைக் கட்டவும், உங்களை நீங்கள் தட்டி எழுப்பிக் கொள்ளுங்கள்.

இஃதே உண்மையான மதம்! இஃதே உண்மையான வழிபாடு!!

முற்றும்.

மதம் மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறது?

மதம் மக்களுக்கு நன்மை செய்யவில்லை என்பதைப் பற்றி அறிஞர் Hon. பெர்ட்டிரண்ட்ரசல் M. A. F R. C. S. அவர்கள் கூறுகிறார்:— அவற்றில் சில உங்கள் பார்வைக்கு வைக்கின்றோம்.

மதம் என்பது பயம் என்னும் வித்திலே தோன்றி சொல்ல முடியாத தொல்லைகளை—இன்னல்களை, மக்களுக்கு அளிக்கும் வியாதி விருட்சம் என்றே நான் எண்ணுகிறேன்.

"கிறிஸ்துவ வேதங்களில் காணப்படும் ஏசுநாதருடைய அனேக உபதேசங்களுக்கும், தற்காலக் கிறிஸ்துவர்களின் நடவடிக்கைகளுக்கும் வெகு தூரம் என்பது நாம் அறிவோம். இந்தக் கிறிஸ்துவ மதம் எப்படி பரவியது என்பதை நாம் ஆராய்ந்தும் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது, சரித்திரத்தை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தாலும், சமூக முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தாலும் கிறிஸ்துவ மதம் பரவுவதற்கு முக்கியாம்சமாக விளங்கியவை திருச்சபைகளே (Churches) அன்றி ஏசுநாதர் (Christ) அல்ல என்பது வெளியாகின்றது. ஆகவே மக்களின் முன்னேற்றத்திற்காக கிறிஸ்து மதம் என்ன

செய்திருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டுமென்ருல், நாம் ஏசுநாதரின் கட்டளையை கவனிக்காமல் கிருஸ்துவ மதத்தின் திருச் சபைகளையே கவனிக்க வேண்டும்.

ஏசுநாதர் என்ன உபதேசம் செய்திருக்கின்ருர்?

"உனது சொத்துக்கள் முழுவதும் ஏழை மக்களுக்குத் தானம் அளிக்கப்பட வேண்டும்"

"நீ பிறரிடம் சண்டையிடக் கூடாது"

"நீ விபச்சாரத்திற் கெனத் தண்டனை யளிக்கக் கூடாது" என்றல்லவா கட்டளையிட் டிருக்கிருர்.

கத்தோலிக்கர்களானலும் சரி, புராட்டெஸ்டெண்டுகளானலும் சரி,எந்தக் கிறிஸ்துவராவது அவர் கூறிய கட்டளையைக் காப்பாற்ற மனப் பூர்வமாக ஆசைப்படுகின்ருரா?

இதே போல் புத்த மதத்திலும் இருக்கிறது. அன்பின் உருவான, அருள் வடிவான புத்தர், தன்னை மரணத்தைப் பெற்ற மானிடன் என்று தவருக புரிந்து கொண்ட தன் சீடர்களை நோக்கி, தான் மரணத் தறுவாயிலிருக்கும்போது அவர் அன்னவருடைய மடமையை எள்ளி நகையாடினர். ஆனல்பௌத்தர்களோ, அதிலும் மிகச் சிறப்பாக திபேத் பீடபூமியில் இப்போதிருக்கும் புத்த மதாச்சாரியார்களோ வெனில் மருளும், பெருமிதமும், கொடூரமும்

ஒருங்கே ஓருருவெடுத்தாற்போலவேதான் இருக்கிறார்கள்.

o o o

ஒரு பரம தத்துவத்தை ஓர் மகான் பகிரங்கமாக வெளியிட்டவுடன், பல முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி, அவருடைய உபதேச மொழிகளை விளக்கிக்காட்ட முற்படுகின்றனர். இவ்விதமான பிரச்சாரகர்களிடத்தில்தான் உண்மை விளக்கத் திறவுகோல் இருப்பதாகக் கருதப்பட்டு அவர்களுக்கு அபார சக்தி இருப்பதாகக் கற்பிக்கப்படுகின்றது.

இவ்விதம் உரிமை பெற்ற வகுப்பினர்களெல்லாம் தங்களிடம் இருப்பதாகக் கற்பித்த அபார சக்தியைக் கொண்டே தங்களுடைய சுயநல முன்னேற்றத்தைப் பூர்த்தி செய்ய முற்பட்டுவிடுகின்றனர். பிறப்புரிமை, சொத்துரிமை முதலிய வேறு பல உரிமைகளால் மற்றவர்களைப் புறக்கணித்து மேம்பட்டு விளங்கும் பல வகுப்பினர்களைவிட, இந்தக் கடவுள் உரிமை பெற்ற வகுப்பினர்களால் மக்களுக்கு விளையும் தீங்கு பன்மடங்கு அதிகம்.

கலீலியோ (Galileo) டார்வின் (Darwin) போன்ற விஞ்ஞான விற்பன்னர்களை மதத்தின் சார்பாக எதிர்த்தனர்—ஏன்? நமது காலத்திலும் ப்ருட் (Freud) என்பவரை திருச்சபைகள் எதிர்க்கவே செய்தன. மாந்தருடைய மனதறிந்த வாழ்க்கையைக்கூட இந்தக்

கிறிஸ்துவத் திருச்சபையானது தகுந்த காலத்தில் தலையெடுக்காதபடி அழுத்தியே வந்திருக்கிறது.

o o o

மதம், மனிதர்களின் அறிவை மட்டும் அழிக்கவில்லை; அவர்களுடைய ஒழுக்கத்தையும் (Morals) மாளச் செய்திருக்கிறது. நான் ஏன் இவ்விதம் கூறுகின்றேன் என்றால், மக்களுக்கு இன்பத்தை தரும் ஒவ்வொரு மார்க்கத்தையும் மதம் தன் உபதேச மொழிகளால் தடை செய்கிறது.

o o o

மனிதர்களை, ஆடுகளை, மாடுகளை விலை கொடுத்து வாங்குவதுபோல வாங்கி, அடிமைகளாக்கி, இரவு பகல் ஓய்வின்றி வேலை வாங்கும் கொடிய செயலை தவிர்க்க வேண்டும் என்ற பெருங் கிளர்ச்சி ஏற்பட்டபோது, அதையும் கிறித்துவ திருச்சபைகள் மதத்தின் பெயரால் எதிர்த்து நின்றது நமக்கு தெரிந்த விஷயமேயாகும்.

o o o

ஒரு கை விரல்களால் எண்ணக்கூடிய ஒருசில முக்கிய திருச்சபைகளைத் தவிர மற்றவை யனைத்தும் மக்கள் பொருளாதார சம்பந்தமான துறைகளில் மேலோங்குமாறு வேலை செய்யும் ஒவ்வொரு திருச்சபையும் மேலோங்காதபடி தடுக்கும் முறையிலேயே வேலை செய்வதை இன்றும் காணலாம்.

o o o

கிறிஸ்துவ மதமும்—பெண்களும்

கிறிஸ்துவ மதத்தின் பெயரால் பெண்ணுலகத்திற்கு ஏற்பட்ட கொடுமைகள் பல. நேர்மையற்றதும், இயற்கைக்கு மாறானதும், அறிவுக்கு பொருந்தாதவைகளுமே அவற்றின் தன்மையாகும். ரோமாபுரியின் ஏகாதிபத்தியம் சீர்குலைந்து சிதறுண்ட அக்காலத்தில் தான் இந்த அநாகரிகக் கொள்கைகளின் தீமைகளெல்லாம் அறிஞருலகத்திற்கு நன்கு வெளியாயின. "பெண்கள் சமூகத்தைப் போற்றி வந்தது கிறிஸ்துவ மதமே" என்பதாகப் பலர் பறைசாற்றி திரிகின்றனர். இஃது உண்மையல்ல. மத அபிமானமுள்ள சரித்திரக்காரர்களால் கட்டிவிடப்பட்ட குருட்டுத்தனமான புரட்டுக் கூற்றுகள். ஒரு சிலரால் வேதவாக்கென வரையறுக்கப்பட்ட —மாற்றமுடியாத பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்ட பெண்ணுலகம் இயற்கை உலகில்—பகுத்தறிவு உலகில் எல்லா துறைகளிலும் நலம்பெற்று மேன்மை அடைவது என்பது எப்படி முடியும்?

o o o

மக்களை மயக்கி சாத்தானிடம் சேர்ப்பிக்கும் தூதர்கள் பெண்கள் என்றும் காமக் களஞ்சியமே அவர்கள் பிறவிக்குணம் என்பதாகவும் கிறிஸ்துமதப் போதகர்கள் எக்காலத்தும் பறைசாற்றி வந்திருக்கின்றனர். இன்னும் பெண்களைப்பற்றி மதப் பிரச்சாரங்கள், அதாவது திருச்சபைகள் என்ன கூறுகின்றன என்று

பார்ப்போமானல், பெண்களுக்கு கன்னிகா நிலைமையே (Vriginity) பிரதானமாம். அதாவது பெண்கள் கணவரில்லாமல் கன்னிமாடத்தில் இருக்க வேண்டுமாம். இந்த நிலையை அடைய சக்தி அற்றவர்களுக்குத்தான் இல்லற வாழ்வு எற்பட்டிருக்கிறதாம். "நெருப்பில் பாய்வதற்குப் பதில் கணவனைக் கொள்" (It is better to marry than to burn) என்று அர்ச். பவுல் (St. Paul) என்னும் கிறிஸ்துவ சிரேட்டர் கூறியிருக்கின்றார். இவ்வாக்கிலிருந்து பெண்ணுலகத்தையும், இல்லறத்தையும், இயற்கை இன்பத்தையும் எவ்வளவு கேவலமாக கிறிஸ்துவர்கள் மதத்தின் பெயரால் மதிக்கின்றார்கள் என்பதைப் பாருங்கள்.

கிறிஸ்துவ மதமும், பாபமும்

கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளி லெல்லாம் மிக முக்கியமாக விளங்கும் பாபம் என்பதைப் பற்றிய கொள்கை யொன்றினல் விளைந்திருக்கும் சீரழிவு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது.

இந்தப் பாழும் பாபத்தின் மேல் கொண்ட மூட நம்பிக்கையின் காரணமாக, மக்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களை வாய்விட்டுக் கூறவும் பயந்து, துன்பங்களைச் சகித்துத் தவிக்கின்றனர். அதுமட்டுமா? அந்த கஷ்ட நஷ்டங்கள் அவர்கள் செய்த பாபத்தால் விளைந்த விதி என்றும் நம்பினர். அவற்றை எதிர்ப்பது குற்றம் என்றும் எண்ணினர். எல்லா கஷ்டங்களையும், நஷ்டங்களையும், துன்பங்களையும், தொல்லைகளையும் அமைதியுடன்

சகித்தலே அறிவுடைமை: வீரத் தன்மை என்றும் கருதினர், ஆம்! திருடனைத் தேள் கொட்டினல் எந்த நிலையில் இருப்பானே அதே நிலையில் இருக்கின்றனர். திகைத்து வாடுகின்றனர்.

o o o

அநேகமாக எல்லாரையும் மேகப்படை (Syphillis) என்னும் நோய் வாட்டுகிறது. அதனை அடியோடு ஒழிக்க வேண்டும். அதற்கு என்ன வழி என்று நாம் பரிகாரம் தேடுகின்றோம். முன் சாக்கிரதையாக சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் எவரும் இந்த நோய் தன்னை அணுகாதபடி பார்த்துக் கொள்ளலாம். இஃது அனைவரும் அறிந்ததே யாகும். ஆனல் கிறிஸ்துவர்கள் கூறுகின்றனர், "நோய் நீங்கும் வழிகளை அவருக்கு எடுத்துக் கூறி முன் சாக்கிரதையாக இருங்கள் என்று சொல்வது, நோய் நீங்கும் இரகசியத்தை எடுத்து இயம்புவது மகா பாவம், எங்கள் மதக் கொள்கைக்கு மாறான செய்கை. எனெனில் பாபம் செய்தவர்கள் தண்டனை அடைய வேண்டும். அதுதான் சரியான வழி" என்று. இஃது எவ்வளவு மூடத்தனம். ஒரு நோயாளியை மட்டும் கஷ்டப்படுவதுடன் மட்டுமா நின்று விடுகிறார்கள் அவர்கள். இல்லை. அந்த நோயாளியின் மக்களும்கூட அந்தப் பாவிக்காக கஷ்டப்பட வேண்டுவதும் நன்மையாம்! நீதியாம்!

கிறிஸ்துவ உலகில் இந்நாளில் பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் பிறந்த நாளிலிருந்த இந்த கொடிய

மேக நோயால் பீடிக்கப் பெற்று துன்புறுகின்றனர். பாபிகள் பாதிக்கப்படுதலே நன்மை யென்பதாக மதத்தின் பெயரால் மதி கெட்டுக் கூறி வாளா நிற்கும் மூடக் கிறிஸ்துவர்க ளன்றோ அந்த அரும் குழவிகளின் தீராத நோய்களுக்கும், துன்பத்திற்கும் காரண கர்த்தர்கள். இவ்விதமான ஈவு இரக்கமற்ற அரக்கச் செயல்களுக்கு அழைத்துச் செல்லும், மத சித்தாந்தங்களில் மக்களின் உயர்ந்த நோக்கங்களுக்கு எவ்வாறு விமோசனம் ஏற்படும் என்பதே நமது கேள்வி.

o o o

மக்கள் வாழ்க்கை முறையைப் பற்றி இவர்கள் கூறும் மத நோக்கங்கள் ஒருபுற மிருக்க, இல்லற இன்ப ரகசியங்களைப் பற்றி பிறருக்குப் போதிக்கும் விஷயத்தில் இந்தக் கிறிஸ்துவர்கள் கொண்டுள்ள மனப்பான்மையைப் பார்ப்போம்.

மதப் பற்று அதிகமுடைய கிறிஸ்தவர்கள், தங்கள் மக்களுக்கு, இல்லற இன்ப ரகசியங்கள் வெளிவராத படி, மதத்தின் பெயரால் தடை செய்வதால் விளையும் தீமை எவ்வளவு என்பது அனைவருக்கும் தெரியும்.

இவர்கள் இவ்விதம் கூறுவதனால் அவர்களுடைய மனோ—தேக சுகம் குன்றுவதோடு மேற்படி விஷயங்களை உண்மை ஞானமற்ற பிறமனிதர்களிடத்திலிருந்து அரைகுறையாகவும் ஒன்றிரண்டு மாறுபாடாகவும் கேட்டு, அதனால் அவர்கள் அல்லற் குழியிலாழ்ந்து அவதியுறுகின்றனர். இதனால் தான் அந்தச் சிறுவர்

கள் உள்ளத்தில் பெண்ணுலகம் கேவலமானது, கெடுதலானது, என்ற எண்ணங்கள் வேரூன்றுகின்றன. ஞானம் எதுவாக இருப்பினும் மக்கள் அனைவருக்கும் தேவையானது. ஆதலின் எக்காலத்திலும், எவரும், எந்த ஞானத்தையும் தடை செய்யத் தகாது. எல்லா ஞானங்களைவிட இந்த இல்லற இன்ப இரகசிய ஞானம் மக்களுக்கு இன்றியமையாத தாதலின், இதை எக்காரணத்தாலும் தடை செய்தலே கூடாது. ஒருவன் ஒரு காரியத்தைப் பற்றிய உண்மைகள் ஒன்றும் தெரியாத போது அவன் செய்யும் தவறுகள், அவன் அவற்றை உணர்ந்தபோது அவ்வளவு செய்யமாட்டான். ஆதலின் உண்மை விளக்கம் எவருக்கும் உத்தம மானதே, இயற்கை உணர்ச்சியால் நிகழும் காரியங்களைப் பற்றிய, அவ்வித ஞானத்தைச் சிறுவர்களுக்கு விளக்கிக் காட்டாமல், பாபம் என்றும், சாத்தான் என்றும், விதி என்றும் கூறிப் பயத்தால் அவற்றை அழிக்கத் துணிதல் பேதமை யாகும்.

புகை வண்டித் தொடரைக் காண ஆவல் கொள்ளாத குழந்தையும் இருக்கிறதா? ஒரு சிறுவனிடம் தம்பீ! நீ ரயில் வண்டியைப் பற்றி நினைக்காதே, அது பெரிய கெடுதலாகும் என்று கூறி, அவன் ரயில்வே நிலையத்தில் இருக்கும் போதும், ரயிலில் பிரயாணம் செய்யும் போதும் அவனின் கண்களைக் கட்டிவைத்து ரயில் என்ற வார்த்தையைக்கூட அவன் கேட்கும்படி பிறரைப் பேசவிடாமல் தடுத்து அவன் எவ்விதம் ஓர்

ஊரிலிருந்து மற்ெருரு ஊருக்குப் போனுன் என்பதைக் கூட பரம ரகசியமாக அவன் மனதில் தோன்றுமாறு பல மாறு பாடான விஷயங்களால் போதித்து வருவ தாக வைத்துக் கொள்வோம். இவ்வாறெல்லாம் செய்வ திஞல் ரயிலே நேரில் காண வேண்டும் என்னும் ஆசை அவனிடம் குறைவுபடுமா? ஒருக்காலும் குறைவுபடாது. ஆனல் ஆசை முன்னிருந்ததைவிட அதிகரிக்கும். நொடிக்கு நொடி அந்த ஆசை வளர்ந்து கொண்டே யிருக்கும். இவ்விதமாகவே இயற்கையாகத் தன் மன தில் தோன்றும் ஆவலைப் பாப கர்ம மானது என்பதா கப் பிறர் கூறும் ஒரு கொள்கையை அவன் எவ்வாறு மதிப்பான்? மிகக் கொடியதும், நியாய விரோதமான தும் இயற்கைக்கு மாருனதாக வன்ரோ கொள்வான். இவ்வித செய்கையால் புத்தி சாதுர்யமுள்ள குழந்தை கள் கூட மனமுடைந்து கடைசியில் பைத்தியங்க ளாவார்க ளென்பது நிச்சயம். நிற்க ரயில் வண்டியைப் பற்றிஎவ்விதமனப்பான்மை நிகழ்வதாகக்கூறினேமோ அதே மனப்பான்மைதான். இருபாலரின் இல்வாழ்க் கையைப் பற்றிய இரகஸ்யத்தை மறைப்பதால் நேரும். ரயிலைப் பற்றிய விஷயத்தைவிட இந்த விஷயம் இன்றியமையாத தாதலின் இதனுல் நேரும் தீமை இன் னும் அதிகம். கிறிஸ்துவர்கள், ஆண் பெண் இருபாலா ரில் நல்ல பருவமடைந்த ஒவ்வொருவரும் தற்காலத்தில் நரம்புத் தளர்ச்சியால் குன்றியிருப்பதற்கும் காரணம் அவர்கள் சிறுவர்களாக இருக்கும் போது மதத்தின் பெயரால் இல்லற ரகஸிய ஞானம் தடை செய்யப்பட்ட

தால் அவர்கள் தெளிவு பெருமல் மதிமயங்கி மாறு வழிகளில் சென்று சிதைவுண்டதனுலேயே யெனலாம். இளமையில் இவர்களது மனதில் ஊன்றப்படும் பாபம் என்னும் வித்தே பிற்காலத்தில் கொடூரசிந்தை, பயங்கரம், மௌட்டீகம் முதலிய கிளைகளாகப் பரிணமிக்கின்றது. ஒருசிறு குழந்தை, தான் இயற்கையாக அறிய ஆவல் கொள்ளும் எந்த விஷயத்தையும், பெரியோர் அவர்க ளிடத்திலிருந்து மறைத்தல் அறிவுடைமை யாகாது. இவ்விஷயம் பிரதம பாடசாலைகளில் கையாளப்பட்டு மேலோங்குகிற வரையில் எந்த தேசமும் அறிவுடைய மக்களைப் படைத்தல் இயலாது. ஆனல் கிறிஸ்துவ மதத் திருச்சபைகளால் தேசக் கல்வி ஸ்தாபனங்கள் ஆட்டப்படுகிற வரையில் இக்காரியம் நடைபெறுதல் குதிரைக் கொம்பே யாகும்.

o o o

நாம் குறித்த கிறித்துவக் கொள்கைகளைப் பற்றிய எதிர்ப்புகள் ஒருபுறமிருக்க, இன்னும் நன்ருக விளக்கிக்கூற வேண்டுமானுல் கிறிஸ்து மதத்தின் முக்கிய தத்துவங்களனைத்தும் சர்வ தேச வர்த்தமானங்களுக்கேற்ப மாற்றப்பட வேண்டியதே. அவ்வாறு மாற்றப்படுகிற வரையில் கிறிஸ்து மதத்தை அறிவுடையோர் எவரும் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

o o o

கடவுள் இவ்வுலகைப் படைத்தார். அவர் அன்பின் உருவம், சர்வவியாபி. இந்த உலகை படைப்பதற்கு

முன்னமேயே இதில் கஷ்ட நஷ்டங்கள் பல உண்டாகும் என்பதை உணர்ந்தவரே; ஆகவே இந்த உலகில் நடைபெறும் எல்லா காரியங்களுக்கும் ஆதி காரணம் கடவுளே. அப்படியிருக்க கஷ்ட நஷ்டங்கள் பாபத்தால் விளைந்தவை என்பது எப்படி பொருந்தும்? தீவினை பாபத்தின் பலன் என்ருல் — நீண்ட நதிகள் நிலை தடுமாறி வெள்ளப் பெருக்கெடுப்பதற்கும், எங்கோ உள்ள எரிமலைகள் எதிர்பாராதவிதமாக கனல் கக்குவதும், பூகம்பங்கள் உண்டாவதும் எதனுல்? இயற்கையினுலா? இறைவனுலா? அல்லது பாபத்தினுலா? அது பாபம் காரணமாக ஏற்பட்டது என்று வைத்துக் கொண்டால் அதனுல் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன? மக்கள் மாள்வதுதானே நடைபெறுகிறது. மனிதர்களைக் கொன்று மகிழ்வதே மாண்பாகக் கருதும் ஒருவனை, நான் முன்கூட்டியே அறிந்திருப்பேனுனல், அவன் புரியும் கொலைகளுக்கு கர்த்தா யார்? நானு—அவனு?

கடவுள் மக்களைப் படைப்பதற்கு முன்னரே அவர்கள் செய்யும் பாபங்களை உணர்ந்திருந்தார் என்பதை உண்மையெனக் கொள்வோமாயின், மக்கள் செய்யும் பாப வினைகளுக்கு உரிய பலாபலன்கள் யாரைச் சாரும்? மக்களைப் படைத்த கடவுளையன்றோ சாரும்?

இப்படியிருக்க, கிறிஸ்தவர்கள் தங்களது பாபக் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டும் எடுத்துக்காட்டு என்னவெனில், இவ்வுலகிலே கஷ்டங்களை அனுபவிப்ப

தால்தான் ஒருவனுடைய பழைய பாப மூட்டைகள் செலவழிந்து தூய்மை அடைகின்றானும். ஆகவே நம்மை நோக்கி வரும் எல்லா கஷ்டங்களும் நமது நன்மைக்கே யாம். இதிலிருந்து இந்த உலகில் நிச்சயம் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்றும், இந்த உலகில் உள்ள மக்கள் அனைவரும் பாபிகள் என்றும் அறியப்படுகின்ற தல்லவா?

o o o

எந்த கிறிஸ்தவனுகிலும் சரி, என்னோடு வந்து பால் மணம் மாருத குழந்தைகள் இருக்கும் ஒரு மருத்து வச் சாலைக்குள் நுழைந்து அவர்கள் படும் துன்பங்களை கண்கொண்டு காணட்டும். அவர்கள் அவ்வாறு கஷ்டப் படுவதற்குக் காரணம் அவர்கள் செய்த பாபங்கள்தான் என்றால், அந்தக் குழந்தைகள் செய்த பாவங்கள் இன்னதென கூறட்டும். அந்தப் பச்சிளங் குழந்தை களைப் பார்த்து அவர்கள் பாவிகள்தான் என்று துணிந்து கூறினல், அவனை அன்புடையவனென்றோ, அனுபவமுள்ளவனென்றோ மனித இதயம் பெற்றவன் என்றோ நீங்கள் கருதுவீர்களா? பாபச் செயல்களைச் செய்யுமாறு படைத்து அனுப்பிவிட்டு, அந்தக் குழந்தை கள் பாவிகளாய் பரிதவிக்கின்ற நேரத்தில், துன்புறு கிற வேளையில் அவற்றைப் பதுங்கி இருந்து பார்த்து மகிழும் நெஞ்சில் ஈரமற்ற கடவுளுக்கும், ஒரு பாவமும் அறியாத சிறு குழந்தைகளைப் பாவியென வாய் கூசாது கூறும் கிறிஸ்தவனுக்கும் என்ன வித்தி யாசம் இருக்கிறது? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

இதிலிருந்து அறிவுள்ளவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் மூன்று. அவை, (1) கடவுள் என்பவர் அறிவற்றவராக இருக்கவேண்டும். அல்லது (2) மக்கள் மதியிழந்தவர்களாக இருக்க வேண்டும். அல்லது (3) இதனைப் பாவம் என்று கூறுகின்றார்களே அந்தக் கூற்று பொய்யாதல் வேண்டும். இம்மூன்றில் அறிவுலகம் எதனை வேண்டுமானாலும் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

o o o

இன்னல்கள், இடுக்கண்கள் நிறைந்த இந்த நில உலகின்கண் நிகழும் எல்லாம் நமது நன்மைக்கே என்று என்றும் நம்பிக்கையுடைய எவரும், தன்னுடைய பழக்க வழக்கங்களைச் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப மாற்றாமல், ஒரே மாதிரியாக எக்காலத்தும் மேற்கொண்டொழுக முடியவே முடியாது. அவ்வாறு செய்ய முற்படுவானாயின் அவன் தனக்கேற்படும் கஷ்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மூலகாரணமாக ஒவ்வொரு பாபத்தைக் கற்பித்து அதற்காக கடவுளின் மன்னிப்பை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாந்து நிற்க வேண்டியதே.

நான் ஏன் மதத்தை மறுக்கிறேன்?

மதத்தைப் பற்றிய மறுப்புகள் இரண்டு உண்மைகளை அடிப்படையாக அமைத்துக்கொண்டு எழுதப்படுகின்றன. ஒன்று அறிவின் சம்பந்தமான உண்மை; மற்றொன்று பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையான கொள்கைகளின் சம்பந்தமான உண்மை.

அறிவின் சம்பந்தமான மறுப்பு என்னவென்றால்:-

மதத்தை மக்கள் நம்பவேண்டுமென்பதற்கு மதவாதிகள் கூறும் அத்தாக்ஷிகள் பகுத்தறிவுக்குப் பொருந்துவதாக இல்லை.

மதத்தின் பெயரால் தழுவப்படும் பழக்க வழக்கங்களைப் பற்றிய மறுப்பு என்னவென்றால்:—

மதங்கள் என்பவை — மக்கள் மிருகங்களைப் போல் ஒருவரை ஒருவர் கொன்று தின்று, காடு மேடுகளில் நிர்வாணமாய் அலைந்து திரிந்த காலத்தில் ஏற்பட்டன. ஆகவே, அவைகளின் கொள்கைகள், சகோதரத்துவம், சமதர்மம், பொது உடைமை முதலிய தற்கால நாகரிக கொள்கைகளுக்கும் முற்றிலும் மாறுபட்டவை. அத்துடன் பழைய காலத்து மிருகத் தன்மையே உயர்ந்ததென பறை சாற்றுவ தாகவும் இருக்கும்.

பகுத்தறிவின் சார்பில் நின்று எழும் பிரச்னைகளை இன்னும் விளக்கமாக எடுத்து ஆராய்வோம். பிரத்தியக்ஷப் பிரமாணங்களையே பெரிதென மதிக்கும் தற்கால நாகரிக உலகம், மதக் கொள்கைகள் உண்மையா? பொய்யா? என்பதைப் பொருட் படுத்துவதில்லை; ஆனால் இன்றைய உலகம் எதை கவனிக்கிறது என்றால், மதம் மக்களுக்கு நன்மை செய்கின்றனவா? தீமையைத் தருகின்றனவா? என்பதையேயாகும்.

இருந்தாலும் இந்த இரு விஷயங்களும் ஒன்றை ஒன்று சார்ந்ததாகவே இருக்கின்றன. இந்த இரு

கேள்விகளுக்கும் விடை ஒன்றாகத்தான் கூறவேண்டுமே யொழிய, ஒன்றை மறுத்து மற்றொன்றுக்கு விடை கூறுதல் பகுத்தறிவுக்குப் பொருந்தாது.

நாம் கிறிஸ்துவர்களாக இருக்கும்போது எதை எதை நன்மைகள் என்று கருதுகின்றோமோ, அவைகளை நாம் கிறிஸ்தவரல்லாதவர்களாக மாறும்போது நாம் நன்மைகள் என்று நம்.ப முடிவதில்லை. நன்மை என்றால் அது எக்காலத்திலும், எந்த மதத்தினருக்கும் ஒரே தன்மை யுடையதாகத் தானே இருக்கவேண்டும்? அப்படி இருக்க கிறிஸ்துவ மதம், மதத்தை பின்பற்றும் போது நன்மையாகவும், அம் மதப் பற்றை விட்ட போது தீமையாகவும் இருக்கக் காரணம் என்ன? இதனால் நாம் எதை தெரிந்து கொள்கிறோம். தீமைகளை நன்மைகளாகக் கருத வேண்டிய நிலைமையில் மதம் மக்களை மயக்கிப் பல வந்தப் படுத்தி வருகிறதென்பது விளங்குகின்றதல்லவா? அன்றியும், சில கொள்கைகளுக்கு ஆதாரமான அத்தாக்ஷிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கட்டாயம் நம்பியே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறபோது, அவ்விதப் பற்றுதலால், அவனுக்கு அக் கொள்கைக்கு மாறுபட்ட ஆதாரங்கள் வெளிப்படும் போது அவற்றின் மீது விரோதமும், அவ்வித மாறுபட்ட ஆதாரங்களில் உள்ள உண்மையை ஓர்ந்து பாராமல், கண் மூடித்தனமாய் இருக்கவும் அது அவனைச் செய்கிறது. எனவே இவற்றிலிருந்து மக்களின் அறிவை அழித்து, உணர்ச்சியை ஒடுக்கி கண்

மூடி வழக்கத்திற்கு நிர்ப்பந்தப் படுத்தி வருவது மதம் தான் என்று அழுத்திக் கூறுவதில் தவறு என்ன என்பதை ஆராய்ந்து தெளிவீர்களாக.

மதம் மக்களுக்கு நன்மை பயக்குமா? என்னும் கேள்வியை நாம் ஆராய்வதற்கு முன், மதம் உண்மையா? என்பதை பரிசீலனை செய்தாக வேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும், யூதர்களுக்கும் மதம் என்பதில் உள்ள அடிப்படையான தத்துவம் 'கடவுள் உண்டு' என்பதேயாகும். மதத்தின் ஆதிக்கம் அதிகரித்திருந்த அந்த நாளிலே வேண்டுமானால் 'கடவுள்' என்னும் சொல்லிற்கு ஏதோ ஒரு தாத்பரியம் இருந்ததாகக் கொள்ளலாம்; ஆனால், இன்று நிலைமை எப்படி இருக்கிறது? பகுத்தறிவு வளர்கிறது, உண்மை விளக்கம் ஓங்குகிறது, பகுத்தறிவு வளர வளர உண்மை விளக்கம் ஓங்க ஓங்க 'கடவுள்' என்னும் பதத்தின் அர்த்தம் படிப்படியாக் குறைந்து மறைந்து கொண்டே போய், அந்தப் பதத்திற்கு ஓர் அர்த்தமும் இல்லாத— ஏன்? என்று சொல்ல முடியாத நிலைமைக்கு இன்று வந்துவிட்டது.

ஆத்மாவும் அழியாமையும்

ஒவ்வொருவருக்கும் ஆத்மா (Soul) உண்டு என்ற கொள்கையை, எல்லா சித்தாந்தங்களைவிட தலை சிறந்தது எனக் கிறிஸ்துவ மதம் பறைசாற்றுகின்றது. பலம் குன்றி மனம் சிதைந்து, அறிவற்று அரசியல் துறைகளில் ஒரு சிறிதும் பற்றற்று, ஒடுங்கித் தண்ணீர்த்

தொட்டிகளில் தனித்து வசித்தலே பிரதானமாக நினைத்து வந்த சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்டோயிக்ஸ் (Stoics) எனப் படுவோருடைய கொள் கையைப் போன்று, ஆத்மா என்பதாக தனித்தோர் பொருள் மனிதனுக்குள் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து கொண்டிருக்கிறது என்ற கொள்கையும், சுய நலப் பிரியர்களால் கற்பிக்கப்பட்ட மௌட்டிகக் கூற்றேயாகும்.

இந்தக் காலத்திலுள்ள மதப்பற்றுள்ள கிறிஸ்து வர்கள் எதை மேலாகக் கருதுகிறார்கள்?

விபசாரம் மகா பாவமாம். தேசீய பித்தலாட்டம் உலக தர்மமாம்.

விபசாரம் என்பது தனிப்பட்ட முறையில் ஏற் படும் குற்றமாம்; ஆனல் தேசீயப் பித்தலாட்டம் என் பது, பல்லாயிர மக்களின் பொது நன்மைக்காக உழைக்க முன் வந்த ஒரு தேசீய வாதி, சுயநலத் தால் ஒரு சமூகத்தாரிட மிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டு மற்றொரு சமூகத்தினரை அடக்கி யொடுக்கி இம்சிக்க வெகு சாமார்த்தியமாக முற்படுவதாகும்.

இவை இரண்டில், ஆத்மா என்னும் ஒரு பொருளை கலங்கச் செய்யும் விபசாரம் என்பது மகா பாவமாம். பல கோடி மக்களை மீள வொட்டாது தேசீய பித்த லாட்டத்தில் நசுக்கும்படி அடக்கி வைத்திருப்பது, அதாவது ஆத்மாவிற்கு வேறுபட்ட பொருளின் சம்

மந்தமாக இருத்தலின் அது பாவமல்லவாம். இவை சமய சாமர்த்திய மெனும் உலக தர்மமாம். என்ன! இவர்களது மூடக் கொள்கை. உண்மையில் விபசாரத்தைவிட, இந்த தேசீய வாதிதான், எத்தனையோ ஆயிரம் மடங்கு அதிகமான பாவத்தைச் செய்கிறான்.

மத்திய காலத்திலே (Medieval Period) எது சிறந்த தர்மம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை அறிய வேண்டுமானால், அந்தக் காலத்து சித்திரங்களையும் உருவச்சிலைகளையும் கண்டு நன்றாக உணரலாம். மிக்க இழிவும், தற்பெருமையும் நிறைந்த ஆபாசங்களையே அதிலிருந்து நாம் காண்கின்றோம்.

உலகத்தை துறந்து சந்நியாசியாக வெளியேறியவனே ஞானியாம். ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் உண்டு களித்து இருப்பவனே மஹா புருஷனும்.

உலக மக்களின் உயர்ந்த நோக்கத்தை அலட்சியப் படுத்திவிட்டு, அவர்களுடைய நன்மையைப் புறக்கணித்துவிட்டு, பரோபகாரச் சிந்தையை அறவே ஒழித்து, ஏதோ தனக்குள் இருக்கும் ஆத்மா எனும் போலிப் பொருளின் நன்மைக்காக, நன்றாகச் சொல்ல வேண்டுமென்றால், தன்னுடைய சுயநல மேன்மைக்காக, சோம்பேறியாய், இயற்கைக்கு மாறுபட்ட வகையில் காடு குகைகளிலே தன்னந் தனியனாய் விலங்கென ஒளிந்து திரியும் அவன் எவ்வாறு 'மஹான்' ஆவானோ அறிகிலேன். இத்தகைய மகா ஞானிகள்

ஒரு புறமிருக்க, உலக விஷயங்களில் ஈடுபட்ட எத் தகைய மனிதரை மதம் பாராட்டி பரம புருஷர், ஞானி என்ற பட்டம் அளிக்கின்றதென என்பதையும் ஆராய் வோம்.

அர்ச். லூயிஸ் (St. Louis) என்பவரை கிறிஸ்துவ மதம் போற்றுகின்றது. அவர் என்ன செய்தார்? பொது நன்மைக்கு ஏதாவது செய்தாரா? இல்லை, ஆனல் என்ன செய்தார்? கிறிஸ்துவ மதத்தின் பெய ரால், கிறிஸ்துவ மக்களின் பெயரால், தங்கள் இனம் ஆதிக்கம் பெறவேண்டும் என்னும் மௌட்டீக அகங்கா ரப் பித்தால் துருக்கியரை எதிர்த்து இருதிறத்தாருக் கும் பெருத்த தீங்கை விளைவித்தார். மற்றபடி மக்களுக் குப் பொருளாதார சம்பந்தமான நன்மைகளைச் செய் வோரையும் கிரிமினல் சிவில் முதலிய சட்டங்களைச் சீர் திருத்தம் செய்து பொது நன்மையைக் காப்பற்ற முற் படுவோரையும் கிறிஸ்துவ மத திருச்சபைகள் ஒரு சிறி தும் பொருட் படுத்துவதில்லை. இவற்றினின்றும் நாம் என்ன அறிகிறோம்? மக்களின் நன்மையை முன்னிட் டுச் செய்யப்படும் காரியங்கள் பிரயோசன மற்றதென் பதே மத சம்பிரதாய மென்பது நன்கு விளங்குகின்ற தல்லவா? தவிர பஞ்சாங்கத்தை (Calendar) புரட்டிப் பார்த்தால் அதில் குறிப்பிட்டுள்ள ஞானிகள் (Saints) எனக் கூறப்படுவோர் எவரை எடுத்துக் கொண்ட போதிலும் அவர்கள் பொதுமக்களின் ஊழியத்தை மேற்கொண்டு தொண்டாற்றியவர் ஒருவராவது அதில் இருப்பதாகத் தெரிகின்றதா? இல்லவே இல்லை.

கிறிஸ்துவ மதம் சென்ற இருபது நூற்றுண்டு களாக மக்களேக் சுயநலப் பிரியர்களாக்கி இயற்கைக்கு மாருகத் தங்களது ஆத்மாவிற்குள்ளேயே அடைபடு மாறு செய்து வருகின்றன என்பது வெளிப்படை.

மனிதனைச் சுயநலத்தி லிருந்து பிரித்து வெளியே அழைத்துச் செல்லுவது, 1. பெண்ணினம் 2. மக்கள் மேல் காதல் 3. சமூகப்பற்று 4. மக்கள் சமூக ஒற்றுமை இவையேயாகும்.

ஆனல் இந்த நான்கையும் கிறிஸ்து மதம் தலே யெடுக்காதபடி செய்திருக்கின்றது. முதலாவது பெண் ணினத்தை மிகமிக கேவலமான தென்று அடக்கி யொடுக்கத் தன்னுலான முயற்சிக ளனைத்தையும் கிறிஸ் துவம் மேற்கொண் டிருக்கின்றது.

மக்கள் மேல் காதல் கொள்ளுதலே கிறிஸ்துவே— ஏன்? அவருடைய பிரதம சீடர்களனைவரும் வெறுத்து உதாசீனம் செய்தே வருகின்றனர். மேலும் கிறிஸ்து மதம் .மேலோங்கி யிருந்த காலத்திலே ரோமாபுரியின் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட தேசங்களில் சமூகப்பற்று எவ்வாறு முறியடிக்கப் பட்டதென்பதையும் நாம் நன்கு அறிவோம். நான்காவதான மக்கள் சமூக ஒற்றுமையை கிறிஸ்து மதக் கோட்பாடுகள் (Gospels) எவ்வாறு சிதைக்கச் செய்தன என்பதை இன்னும் அறிஞர் நன்கு ஆராய்ந்து தெரியாமலே இருக்கின்றனர் கிறிஸ்து மதத் திருச்சபைகள் ஏசுநாதருடைய தாயா

ராகிய மேரி அம்மையை பாராட்டுகின்றதெனினும், ஏசுநாதர் என்ன கூறுகிறூர்? அவருடைய வாக்கிலிருந்து மேரியை உயர்த்திப் பேசிய ஒரு சில வார்த்தைகளாவது காட்ட முடியுமா?

"பெண்ணே! உன்னல் எனக்கென்ன உபயோகம்" Woman! what have I to do with thee (St. John 11. 4) என்று ஏசு கிறிஸ்து தன் தாயைப் பார்த்து கூறுவதிலிருந்து என்ன தெரிகிறது?

இதுமட்டுமா?

"தகப்பனிடமிருந்து மகனைப் பிரிக்கவும், தாயையும் மகனையும் வேறுபடுத்தவும், மருமகளுக்கும் மாமியாருக்கும் வேற்றுமை ஏற்படுத்தவுமே நான் அவதரித்திருக்கிறேன். அவரை (கடவுளை)த் தவிர ஏனைய தகப்பனையும், தாயையும் எவன் நேசிக்கிருனே அவன் கடவுளை அடையமாட்டான்" (Mat. x 35 to 37) என்று பறைசாற்றுவதிலிருந்து என்ன தெரிகிறது? இயற்கையாக ஏற்பட்டுள்ள குடும்பப் பற்றுதல் மதத்தின் பெயரால் அழிக்கப்படுகின்றது என்பது நன்கு விளங்குகின்றதல்லவா? இக்காலத்தில் மேனுடுகளில் மக்கள் சமுதாய வாழ்க்கை முறையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு சஞ்சலமே எங்கு பார்த்தாலும் தலைவிரி கோலமாய் சஞ்சாரம் செய்வதற்கு காரணம் கிறிஸ்து மதமே தவிர வேறு என்ன? தேசீயவாதிகளே யோசித்துப் கூறுங்கள்.

இம்மாதிரியான ஆத்மா அனுத்மா ஆவேசத்தால் ஏற்பட்ட சுயநலக் கூற்றே ஆத்மாவிற்கு அறியாமை எனும் சித்தாந்தத்தை சிருஷ்டி செய்து அதற்கென ஒரு சுவர்க்க லோகமும், அதற்கு மாறுபட்ட கொள்கை உடையோருக்கு நரக லோகமும் சமயோசிதம்போல் மானச பூமியில் சிருஷ்டி செய்வதாயிற்று. இம்மாதிரி யான நரகத்திற்கும், சுவர்க்கத்திற்கும் மாந்தரை அனுப்புவதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள காரண காரியங்களை ஆராய்ந்தால் மிக்க விசித்திரமாகவே இருக்கின்றது.

உதாரணமாக ஒருவன் எத்தனை கெட்ட காரியங் களைச் செய்தவனுக இருப்பினும், அவன் சாகும்போது ஒரு பாதிரி (புரோகிதர்) பக்கத்திலிருந்து தண்ணீர் ஊற்றும்போது ஏதாவது ஒருசில மந்திர வாக்கியங்களை உச்சரித்தபடி உயிர் நீத்தால் உடனே தேவ தூதர்கள் வந்துவிடுவார்களாம்; சுவர்க்க லோகத்தின் கதவு திறந்து வழிவிடுமாம்; அவன் தேவ கணங்ள் புடை சூழ அளவிறந்த போகம் அனுபவிப்பானும். ஆனல் ஒருவன் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தவனு யிருந்தாலும் பாதிரி பக்கலில் நின்று அவர் கைத் தண்ணீர் கிடைக்கப்பெறுமல் திடீரென்று அகால மரணமடைந்து மந்திர வாக்கியங்களை உச்சரிக்காமல் இறந்துபோவானுகில் அவனுக்கு நரகம்தான் கிடைக் குமாம். அவன் எமலோகத்திற்கு எமதூதர்களால் இழுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள வேதனைகளுக்கு ஆளாக வேண்டுமாம்.

எப்படியிருக்கிறது பாருங்கள். இவ்வித அநியாய - ஆபாச மோசக் கொள்கைகளை தற்காலத்திய புராட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்களும், பைபிள் என்னும் வேதத்தைப் புரட்டிப் பாராத நவீன கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் ஆமோதிக்க மாட்டார்கள் என்பது உண்மையே. ஆனால் கிறிஸ்தவ மத சம்பிரதாயப் பிரகாரம் இது உண்மையே. ஆனல் நாகரிகம் முன்னேற்ற மடைந்துள்ள இந்நாளிலும்கூட மௌட்டீகக் கொள்கைகளை குரங்குப் பிடியாய் பிடித்து வாதிப் போரையும் நாம் காணலாம்.

கிறிஸ்துவ மதத்தின் பயனாகத் தோன்றிய ஆத்மாவைப்பற்றிய சித்தாந்தத்தாலும், அதெற்கென சிருஷ்டிக்கப்பட்ட சுவர்க்கலோக சித்தாந்தத்தாலும் கிறிஸ்துவ உலகில் காணப்படும் ஆபாசக் கூற்றுகள் எண்ணிறந்தன. மெக்ஸிகோ, பெரு (Mexico, Peru) என்ற இடங்களிலிருந்த ஸ்பெயின் தேசக் கிறிஸ்துவர்கள் (Spaniards) அங்குள்ள இந்தியக் குழந்தைகளைப் பிடித்து, தண்ணீர் தெளித்து (Baptism) உடனே அந்த இளைஞர்களைத் துப்பாக்கியால் சுட்டு சாகச் செய்து மகிழ்வார்களாம்!

ஏன்?

அவ்வாறு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களைச் சாகச் செய்வதால், அக்குழந்தைகள் சுவர்க்க லோகத்திற்கு போகுமென்று அம்மூடக் கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள். என்னே கொடுமை! இம்மடமைக்குக் காரணம்

எது? மதமன்றோ? மதப்பற்றுள்ள—மத வெறியில் மதி மயங்கியுள்ள எவரும் அவர்களுடைய செயலைக் குற்ற மெனக் கொள்ளவே மாட்டான். ஆனால் அறிவு விளக்கம் பெற்ற இக்காலத்தில் அவர்களது செயல் கண்டிக்கப் படுகின்றது. இதனால் என்ன விளங்குகின் றது? மக்கள் தத்தம் ஆத்மா அழியாதது என்பதாகக் கொண்ட மூடக் கொள்கையையே எண்ணிறந்த ஆபாசங்களுக்கு வித்தாக இருக்கின்ற தென்பதும், தவிர ஆத்மாவை தேகத்தினின்றும் பிரித்த ஆவி வேகமே அனேக ஞான நூல்களில் ஆபாசத்தைக் குவித்து வைக்க இடமளித்த தென்பதும் நன்குக விளங்குகின்ற தன்றோ? அறிஞர்கள் இதனை நன்கு ஆராய்ந்து இவ்வித மூடப் பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து, ஆபாச சித்தாந்தங்களை தலையெடுக்காதபடி நிர்மூலமாக அழிப்பார்களாக!

மதத் துவேஷத்தின் வித்துக்கள்

என்று இந்த உலகில் கிறிஸ்துவ மதம் தலையெடுத் ததோ, அன்றுதான் உலகிலே மதத்துவேஷம் உற்பத்தியாயிற்று. இதனைச் சரித்திர ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாகக் கவனித்தல் வேண்டும். கிறிஸ்துவ மதத்தில் இவ்விதமான மதத்துவேஷ புத்தி தழைத்து ஓங்க மூலகாரணமாக இருந்தவை எவை யெனில், 'ஞானமார்க்கம்.' 'கடவுள் வழிபாடு' எனப்படும் யூதர்கள் (Jews) கொண்டிருந்த இந்த இரண்டு மூட நம்பிக்கைகள்தான். ஆதியில் யூதர்கள் இவ்வித

துவேஷக் கொள்கையை ஏன் ஆதரித்துக் கையாடினூர்கள் என்பது எனக்கே இன்னும் நன்ருக விளங்கவில்லை. இந்த மதத்துவேஷ புத்தி அவர்களிடம் குடிகொண்டதற்குக் காரணம், அவர்களே பிரதேச மக்கள் நாற்புறமும் சூழ்ந்து அடக்கி யொடுக்கி அடிமை கொள்ள முற்பட்டதால் ஏற்பட்ட சுபாவ துவேஷ குணம் என்பதாக யூகிக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும் சரியே. யூதர்களும், முக்கியமாக தீர்க்கதரிசிகள் (Prophets) என கருதப்பட்டவர்களும்தான் இப்போது காணப்படும் மிக்க மௌட்டீகமான ஞானமார்க்க விதிகள் எனப்படுவனவற்றையும், தங்கள் மதத்தை தவிர மற்ற மதங்களை அறவே அழிக்கவேண்டுமென்ற துவேஷ புத்தியையும் முதன்முதலில் புதிதாகக் கற்பனை செய்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய இந்த இரண்டு கொள்கைகளினுல் மேல்நாடுகளில் விளைந்த தீமைகளுக்கு அளவே இல்லை யென்பது சரித்திரப் பிரசித்தம்.

கான்ஸ்டான்டைன் (Constantine) காலத்திற்கு முன்னர் ரோமாபுரியைப் பரிபாலித்துவந்த சக்கரவர்த்திகளால், ஏதோ கிறிஸ்தவர்கள் பலர் கொலை செய்யப்பட்ட விஷயத்தைப் பற்றி இப்போதுள்ள கிறிஸ்தவத் திருச்சபைகள் பிரமாதப்படுத்தி வருகின்றன. ஆனுல் அவ்வித கொலைகள் மிகச் சொற்பமானதும் பல இடங்களிலே—பல காலங்களிலே முக்கியமாக இராஜீய சம்பந்தமாகவே (Political) நடைபெற்றன என்று கூறலாம்- அவ்விதக் கொலைகள் ஒருபுறம் அவ்வாறு

நிற்கட்டும். ஆனால் கான்ஸ்டான்டைன் காலத்திற்குப் பிறகு கிறிஸ்தவர்களுக்குள்ளேயே ஒரு பிரிவினருக்கும், மற்றொரு பிரிவினருக்குமே நடந்த பல மிகக் கொடூர மான கொலைகளுக்கும் (Persecution) காரணம் ரோமாபுரி சக்கரவர்த்திகள்தானா? கிறிஸ்துவர்களுக்குள் கிறிஸ்துவர்களே செய்துகொண்ட இத்தகைய கொலை களைப்போல் எந்த ரோமாபுரி சக்கரவர்த்தியினாலும் நடைபெறவே இல்லை. யூதர்கள் இருந்த இடத்தைத் தவிர, மற்றபடி உலகத்திலுள்ள எத்தேசத்திலும் இம்மாதிரியான கொலைகள் கிறிஸ்துவ மதம் தோன்று வதற்குமுன் நடைபெற்றதே இல்லை. இதனால் மனிதனை மனிதன் வெறுப்பதோடு கொலை செய்யவும் தூண்டு வதற்கு ஒத்தாசையாக இருந்ததும், இருப்பனவும் ஆன வற்றுள் மதம் என்பதும் ஒன்று என்பது தெளிவா கின்றதல்லவா?

தற்கால கிறிஸ்தவர்கள் மிக்க பொறுமையுடனே இருக்கின்றார்களே என்பீர்கள். அவர்கள் சிறந்த குண முடையவர்களாக இருப்பது உண்மையாக இருப்பினும் அவ்வித சாந்த குணம் அவர்களிடத்திலே மிளிரக் காரணம் கிறிஸ்துவ மதம் அல்லவே அல்ல—ஏன்? மேனாட்டுக் கிளர்ச்சி காலமுதல் (Renaissance) இந்த நாள் வரை சுய அறிவாளி (Free Thinkers) களுடைய தொகை அதிகரித்து மேலோங்கி வருவதனாலும், அவர் கள் காட்டிய அறிவு விளக்கத்தால் கிறிஸ்துவர்கள் தங்கள் இழிகுணத்தையும், மூடப்பழக்க வழக்கங்களை யும் நன்குணர்ந்தவர்களாகி வெட்கமுற்றதனாலும் சீர்

திருத்தத்திற்காக எத்தனையோ கிளர்ச்சிகள் செய்து வந்ததன் பயனேயாம். விஷயம் இவ்வாறிருக்க, இப்போது கிறிஸ்தவர்கள் நம்முன்வந்து, நாங்கள் எவ்வளவு தயை தாக்ஷண்யமும், அன்பும் பொறுமையும் உடையவர்களாக இருக்கிறோம் பாருங்கள் என்று கூறுவது மிக்க விந்தையாகவே இருக்கிறது. அவர்களுடைய சாந்தத்திற்கும், அறிவு விளக்கத்திற்கும் காரணமாக இருந்தவர்கள், ஆதியில் அவர்களால்(கிறிஸ்தவர்களால்) கொலை செய்யப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த பிற மதஸ்தர்களின் உபதேச மொழிகளே என்பதை இவர்கள் உணர்கின்றார்களில்லை.

மதமும்—மூடநம்பிக்கையும்

கி. மு. 4004-வது வருஷத்தில்தான் இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்பதாகக் கிறிஸ்துவ மதம் பறைசாற்றுகின்றது. இப்போது அதை நம்புகின்றவர் யார்? ஒருவருமில்லை. ஆனால் கிறிஸ்துவ மதம் ஏகாதிபத்தியம் செலுத்திவந்த அந்நாளிலே எவனாவது ஒருவன் அதற்குமாறாக எண்ணத் தலைப்படுவானெனின் அவனது தலை அப்போது எடுபடும் என்பதில் சந்தேகமே இல்லை. உண்மையை விளக்க ஓர் சிறிய அனுபவார்த்தமான உதாரணத்தை எடுத்துரைக்கின்றேன். என்னுடைய பாட்டனுக்குப் பாட்டனாகிய (Great great Grand-father) ஒருவர், எட்னா (Etna) எனும் எரிமலையினின்றும் எரிந்தெழுந்த உலோகங்களைப் பரிசீலனை செய்து, மதப்பித்தர்கள் கூறுவதுபோல் உலகம் கி. மு. 4004-ம்

வருஷத்தில் சிருஷ்டிக்கப்படவில்லை; இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும் என்ற முடிவு கண்டு, அதனை ஒரு சிறிய நூல் வாயிலாக வெளியிட்டார். இந்தக் குற்றத்திற்காக உடனே அவர் தன் ஊரைவிட்டு தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். அவர் சர்வ சாதாரண மனிதராக மட்டும் இருந்திருப்பின், அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை அம்மட்டோடு நின்றிராது, (அதாவது அவரது தலை தப்பியிராது) என்பதில் சந்தேகமே இல்லை. என்னே! கொடுமை!!

மதத்தினுள் கிளர்ச்சிகள்

ஆனல் சுமார் 150 வருடங்களுக்கு முன் நம்பி வந்த விஷயங்களை இப்பொழுது மதப் பற்றுடையோர்கள், நம்புகின்றூர்களா? இ.ல்·லை எனலாம். அவ்வாறு அவர்கள் இப்போது அறிவுவிளக்கம் பெற்று இருப்பின் அது மதத்தின் பயனுவது எங்ஙனம்? கிறிஸ்து மதத்திலுள்ள ஆபாசக்கொள்கைகள் ஒவ்வொன்றும் மிகப்பலமான எதிர்ப்புகளாலும், கிளர்ச்சிகளாலுமே புரட்சி செய்யபட்டு இங்கிலைமைக்குக் கொண்டு வரப்பட்டதே யொழிய வேறு விதங்களாலன்று. அவ்வித சீர்த்திருத்தங்கள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மதப்பித்தர்கள் முட்டுக்கட்டையாக இருந்து முரண்பட்டே வந்திருக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாகவே சுய சிந்தனையாளர்களை, (Free thinkers) மதப் பாதுகாப்பாளர்களை முறியடித்து

வெற்றி பெற்றனர். ஆதலின் மனிதர்க்கு மனிதர் துவேஷ புத்தியுடையவர்களாகச்செய்து வருவது மதமே என்பதும்; மதக் கிளர்ச்சி யென்பதும், மதம் தோன்றியது முதற்கொண்டே இருந்து வந்திருக்கின்றதென்பதும்; மதம் அழிந்தாலொழிய சமூக ஒற்றுமை யோங்கி மதக்கிளர்ச்சிகள் தாழும் என்பது இயலாதென்பதும் நன்கு விளங்குகின்றதன்றோ? மேலும் மதம் என்றென்று இருக்கும் வரையில் அதற்குச் சார்பாகச் சிலரும், எதிராகச் சிலரும் எக்காலத்தும் இருந்தே வருவார்கள். ஆதலின் இப்போது மதம் எந்நிலைமையிலிருக்கின்றதென்பதிலிருந்து, மதக் கிளர்ச்சியின் பயனை அறிவுள்ளோர் நன்குணர்ந்து தெளிவதோடு, மதத் துவேஷத்தை விடுத்து, அத்தகைய துவேஷ புத்திக்கு ஆதாரமாக இருந்த—இருக்கிற மதங்களையே அறவே ஒழிக்க கிளர்ச்சி செய்வோமாக.

சுயேச்சை அறிவின் சித்தாந்தம்

இயற்கைச் சட்டம் (Natural law) எது?

இயற்கைச் சட்டம் எது? என்ற விஷயத்தைப் பற்றிய முடிவுகள் கிறிஸ்து மதஸ்தர்களிடத்திலே, இன்னும் சந்தேக பாவனையிலேயே ஊசலாடிக் கொண்டிருக்கின்றன—என்பது மிக விசித்திரமாகவே ஒரு சாரார் சுயேச்சா அறிவை (Doctrine of free will)ப் பற்றிய சித்தாந்தத்தை முற்றிலும் ஆதரிக்கின்றார்கள். இந்தச் சித்தாந்தத்தின் சாராம்சம் என்னவெனின்,

மனிதப் பிரயத்தனங்கள் யாவும் இயற்கைச் சட்டங் களுக்கு மாறுபட்டு அதன் ஆதிக்கத்திற்கு அடங்காமல் நடைபெறுகின்றன — என்பதுதான். ஆனல், முக்கிய மாக 18-19-ம் நூற்ருண்டுகளிலே, ஒரு சாரார் இயற் கைச் சட்டங்களிலே பூரண நம்பிக்கை யுடையவர்க ளாக இருந்தார்கள்; அதாவது: இவ்வுலகத்தில் நடை பெறும் சகல காரியங்களும், ஒரு சர்வ வல்லமையுள்ள சர்வேஸ்வரனின் (Law giver) கட்டளைப் பிரகாரம் நடைபெறுகின்றன என்பதும்; அவ்வித இயற்கைச் சட்டங்கள் உலகத்தில் காணப்படுதலே கடவுள் ஒருவர் உண்டு என்பதற்குப் போதிய சான்ருகும் என்பதே யாம். ஆனல் தற்காலத்திலே விஞ்ஞான ஆராய்ச்சி யின் பயனுக, மனிதர் தங்களுடைய பகுத்தறிவின் ஆதிக்கத்தையே மென்மேலும் நம்புகின்ருர்களே யொழிய, சகல காரண காரியங்களுக்கும் ஆதி முதல்வ னெருவன் எங்கேயோ இருக்கிருனென்றும், அவ னது கட்டளையின் பயனுலேயே சகலமும் நடைபெற்று வருகின்றன என்பதுமான ஓர் கொள்கையை நம்பு வதற்குப் பின்வாங்குகின்ருர்கள். ஏன்?—ஜடதத்துவ ஆராய்ச்சியாளர்கள் — பஞ்சேந்திரியங்களால் உணரப் படும் வஸ்துக்களையே நம்புகின்றவர்கள் (Materialists) இப்போது விஞ்ஞானரீதியாக (Laws of Physics) என்ன கூறுகின்ருர்களெனின், நாம் கை கால் முதலிய அங்கங்கள் நீட்டுவதும் குறுக்குவதுமான காரி யங்கள் யாவும், இயற்கையாகத் தாளுகவே சரீர அமைப்புபடி (Mechanically) நடைபெறுகின்றன

என்பதாகவும்; அதற்கென சுயேச்சா அறிவு (Free will) என்பதாக ஒன்று இருந்து இவற்றை நடத்து கின்றதில்லை யென்பதாகவும் கூறுகின்றனர். இவர்கள் கூறுவது போல் யாவும் இயற்கைப் பிரகாரமாக நடைபெறுவதாக இருப்பின், மனிதர்களிலே சிலர் தத்தம் அறிவாற்றலின் பயனுல் கண்டு பிடிக்கும் நூதன விஷயங்களுக்கு ஆதாரம் தான் என்ன? ஒரு கவிவாணர் சிறந்த நூலொன்றை இயற்றுவதற்கும், ஒரு பரம முட்டாள் மற்றொருவனைக் கொலை செய்வதற்கும் மூல காரணமாய் இருப்பது இயற்கையாயின், இவ்விருவருள் முன்னவரின் நிலைக்குப் பூஜை செய்து போற்றுவதும்! பின்னவனைக் கழுவிலேற்றிக் கொலை செய்வதும் மடைமை யாகும் அன்றோ!

மதத்தினுல் ஏற்பட்ட மடமை

தற்காலத்தில் ஒருவன் தன்னைப்போன்ற மனிதனை நடத்துவது போல், அவன் கேவலம் தனது மோட்டார் காரைக்கூட நடத்துவதில்லை. அவனுடைய மோட்டார் ஓடாமல் நின்றுவிட்டால் சீ! இது என்ன பாவம் (Sin) செய்ததோ, தெரியவில்லை. இந்த கதி நேர்ந்தது." என்று அவன் கூறுவதில்லை. அன்றியும் "நீ யொரு கெட்ட (Wicked) மோட்டார் "நீ ஓடாத வரையில் நான் உனக்கு பெட்ரோல் முதலிய எதுவும் கொடுக்கவே மாட்டேன்" என்றுகூறுவதில்லை. ஆனல் என்ன செய்கின்ருன். எங்கு தவறுதல் நேர்ந்தது, இது ஓடாம லிருப்பதற்குக் காரணம் என்ன?

என்பதை விசாரித்து உணர்ந்து, உடனே அந்த தவறுதலை அப்புறப் படுத்தி செம்மைப் படுத்த முற்படுகின்ருன். இதேமாதிரி ஒரு மனிதனை மற்ருெரு மனிதன் நடத்த வேண்டும் என்று நாம் கூறினுல் அது மேலான தெய்வீக மதத்திற்கே விரோத மானது, அபராதம் செய்வதாகிவிடுகிறது. சிறு குழந்களை நடத்தும் முறையிலும் இதே விஷயந்தான் காணப்படுகின்றது. அநேக குழந்தைகளிடம் தோன்றும் கெட்ட நடத்தைகள், அவர்களை அதற்கெனத் தண்டிப்பதனுலே அவரிடம் வேரூன்றி விடுகின்றன; மற்றப்படி அவற்றைக் கவனியாமல் விடப்படின் அது நாளடைவில் தானுகவே அறிவு விளக்கத்தால் மறைந்துவிடும். ஆனுல், குழந்தைகளைப் பராமரிக்கும் தாதிகள் சிறு சிறு குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதால் நாளடைவில் குழந்தைகளுக்குப் பைத்தியமும் பிடித்துவிடுகின்றது.

ஒருவன் குற்றமான கெட்ட காரியங்களைச் செய்வதே தனது வேலையாகக் கருதுவானெனின், அவனை அவ்வாறு செய்யாதிருக்கும்படி செய்விக்க வேண்டுவது முக்கியமானதே யாகும். அதுபோலவே ஹைட்ரோபோபியா (Hydrophobia) என்னும் பித்துப் பிடித்த நாய் கடித்ததினுல் உண்டாகும் ஒருவித ரோகமுடைய ஒருவன், மனிதர்களை யெல்லாம் கடிக்க ஆரம்பிப்பானேயாகில்—அம் மனிதன் தான் செய்யும் காரியங்களுக்கு மனப் பூர்வமாகப் பாத்தியப்படாதவனே யெனினும், அவனை அவ்வாறு செய்யாதிருக்கும்படி

தடுத்து நிறுத்த வேண்டுவது மிகவும் அவசியமேயாகும். பிளேக் என்னும் தொத்து நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிற மனிதன் தன் மனமாரப் பிறருக்குக் கெடுதல் செய்யாதவனே யான போதிலும், அவனையும் ஒரு தனி அறையிலிட்டுப் பூட்டிவைக்க வேண்டியது அவசியமே. அம்மாதிரிதான், மோசடியாகப் பொய்க் கையெழுத்திட்டுப் பத்திரங்களை ருஜுப்படுத்தும் தொழிலையுடைய ஒருவனையும் கருதித் தடுக்க வேண்டியது அவசியமாக ஏற்படுகின்றது; ஆனல் இவனைத் தடுக்கும் விஷயத்தில் மட்டும் "குற்றம் என்பது எவ்வாறு ஏற்பட்டுவிடும்? இவனையும் மேற் கூறிய மற்றவர்களைப் போன்றே கருதித்தான் ஆகவேண்டும். இவன் குற்றவாளியெனின், பைத்தியக்காரனும், பிளேக் நோய் கொண்டவனும் குற்றவாளியே யென்பதில் சந்தேகம் என்ன? இதுதான் பகுத்தறிவிற்கும், அனுபவ சிந்தாந்தத்திற்கும் ஒத்த முறையாகும். ஆனல் இவ்விதக் கொள்கை கிறிஸ்து மத சித்தாந்தங்களுக்கும், வேத ஐதீகங்களுக்கும் மாறுன தென்பதாக கருதப்படுகின்றது. அறிவிற்குப் பொருத்தமான வற்றை மதம் மறுப்பதாக இருப்பின், மதத்தின் மடமையை ஊன்றிப் பகுத்தறிவீர்களாக.

மதத்தின் சொரூபம் பயமும், அகம்பாவமும்

எந்த ஸ்தாபனம் அல்லது இயக்கத்தை எடுத்துக் கொண்ட போதிலும் அதன் பலமும் சிறப்பும் எதில் இருக்கின்றது?

அதனுடைய முக்கிய கொள்கைகளின் உணர்ச்சி (Imbulse) யிலேயும், அதனை எந்த சமூகம் (Community) ஆதரிக்கின்றதோ, அதனுடைய மூல பலத்தையும், முற்போக்கையும் எவ்வளவு தூரம் அது மேலோங்கச் செய்கின்றது, என்பன இந்த இரண்டிலேதான் இருக்கின்றதே தவிர வேறில்லை. சில சமயங்களில் இந்த உணர்ச்சி பகிரங்கமாகத் தெரிகின்றது. ஆனல் சில வற்றுள் அந்தரங்கமாகவே அடங்கி யிருக்கின்றது. உதாரணமாக ஆல்பைன் கிளப் (Alpine club) என்னும் சங்கத்தை எடுத்துக் கொள்வோம். அதன் முக்கிய நோக்கம் என்னவெனின் புதிய புதிய இடங்களைக் கண்டு பிடித்தலேயாம் (Adventures) என்றபடி ஒரு வித்தியா கலா சங்கத்தை எடுத்துக் கொண்டோமானல், அதன் நோக்கம் ஏதோ ஒரு ஞானத்தை விருத்தி செய்தலாகவே இருக்கும். தவிர குடும்பம் எனப்படும் ஸ்தாபனம் அல்லது ஏற்பாட்டை (Institution) எடுத்துக் கொண்டோமானல் அதன் நோக்கம் ஒருவருக்கொருவர் போட்டா போட்டியை உண்டு பண்ணி அக் குடும்பத்தாரை முன்னேற்ற மடையச் செய்வதோடு, பரஸ்பர ஒற்றுமையும் அன்பும் (Parental feeling) ஓங்குமாறு செய்வதாகும். ஒரு உதை பந்து, விளையாட்டுக் கூடம் (Foot ball club) அல்லது ஒரு தேசீய சங்கத்தை (Political party) எடுத்துக் கொண்டோமானல், அவற்றின் நோக்கம் ஒருவருக்கொருவர் போட்டா போட்டியுடன் ஒருங்கே வேலை செய்து திருப்தியும் ஆனந்தமும் அடைதலாகும், ஆனல்

உலகத்திலே இப்போது மிக்க பிரபலமாகக் கருதப் படும் இரண்டு இயக்கங்கள், அல்லது ஸ்தாபனங்கள்—அல்லது, கிறிஸ்துவ மதத் திருச்சபை (Church) தேச பரிபாலனம் (State) என்ற இவற்றின் அந்தரங்க நோக்கக்கள் (Psychological Motivation) நமக்கு ஒன்றும் நன்ருகத் தெரிகின்றதில்லை. தேச பரிபால னத்தின் பூர்வீக நோக்கம் எதுவெனின், தேசத்தை உட்கலகங்கள், வெளிப் போர்கள், என்ற இரண்டு (Internal criminals and External enemies) விதத் தொல்லைகளினின்றும் பாதுகாத்தலாகும். இந்த ஸ்தா பனத்தின் போக்கு (Tendency) சிறு குழந்தைகள் பயப்படும்போது ஒன்றை ஒன்று கட்டிப் பிடித்துக் கொண்டு தங்களைவிட உருவத்தில் பெரியவராக இருக் கும் ஒருவரிடத்தில் அடைக்கலம் புகுந்து அபயம் பெறும் மனப்பான்மை யின்றும் ஏற்பட்டதெனலாம்.

கிறிஸ்துவ மத திருச்சபைகள் ஏற்படுவதற்கான நோக்கம் இன்றும் மிக்க சிக்கலான அடிப்படையை யுடையதாகும். மதம் என்னும் ஓர் ஸ்தாபனம் எற்படுவ தற்கு மூல காரணம் சுருங்கக் கூறுமிடத்து மனிதரின் உளத்திலே ஓடுகின்ற பயமே என்று சந்தேக மில்லா மல் துணிந்து கூறுவேன்—ஏன்? இன்றைக்கும் பாருங்கள் மனிதர்கள் எப்போது கடவுளை நினைக்கின் ருர்கள்? ஏதாவது பெரிய ஆபத்து அல்லது துன்பம் நேர்ந்து விட்டால் அப்போதுதான் அவர்கள் தங்களை அறியாமலே ஆண்டவனை கருதத் தொடங்குகின்ருர் கள். ஒரு யுத்தம், கொள்ளை நோய், கப்பல் கவிழ்தல்—

முதலிய இவைகளே மனிதர்களை மத நம்பிக்கை யுடைய வர்களாகச் செய்கின்றன. மதம் பயத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதோடு மனிதப் பிறவிதான் சகல வற்றிக்கும் மேலானதென்ற தற்பெருமைக் குணத்தையும், அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

கிறிஸ்துவ மதம் உண்மையாக இருக்குமானால், மனித ஜன்மம் தற்போது காணப்படுவதுபோல் புழுவிலும் மோசமாக இருக்கக் காரணமில்லை. ஏனென்றால், மனித ஜன்மங்களைச் சிருட்டித்துப் பாதுகாக்கும் கடமை கர்த்தரையே (Creator) சார்ந்ததாக ஏற்பட்டு விடும், மனிதர்கள் தவறி நடந்தால் அவதிப்படுபவரும், நல்ல வழியில் நடந்தால் சந்தோஷிப்பவரும் அவரே யன்றோ!

மதநீதி

மதத்திற்கு அடிப்படையாக இருக்கும் நோக்கங்களில் மூன்றாவதாக; அதன் கண்ணுள்ள "அறக்கோட்பாடுகளைக் கூறலாம். மதத்தை ஒழிப்பதே தங்கள் சம் மதமாகக் கொண்டுள்ள வேத விரோதி (Free thinkers) களிலும்கூடப் பலர், மதத்தின் நோக்கங்களில் ஒன்றாகிய, அறக் கோட்பாடுகளை மிக்க மேலானதாகவே கருதுகின்றார்கள். அவர்களுடைய இக்கூற்று எனக்குச் சம்மதமாகத் தோன்றவில்லை. மேற் கூறிய அறக் கோட்பாடுகளை விசாரணை மூகத்தால் பரிசீலனை (Psychological analysis) செய்து பார்க்கும்போது, அவைகள் மனிதனுடைய கீழான ஆசாபாசங்களி

லிருந்துதான் தான் உயிர்பெற்று முளைத்தெழுந்திருப்பதாக தெரிகின்றது. ஆதலின் அவற்றை அறிவாளிகள் ஆதரிப்பது நேர்மை ஆகாதென்பதே என் முடிவான அபிப்பிராயம். தர்ம நீதி இன்னதென்று அறிய வேண்டியவர்கள், அதர்ம நீதி இன்னதென்று அறிய வேண்டும். ஏனெனின் அவை இரண்டும் ஒருங்கே தோற்றப் படுவனவாம். தர்மம் இன்றேல் அதர்மம் இல்லை. அதர்மம் இன்றேல் தர்மம் இல்லை.

"அதர்மம்" என்ருல் என்ன?

ஒரு கூட்டத்தாரால் எவை தள்ளப் படுகிறதோ அதுவே அவ்வகுப்பாருக்கு "அதர்மம்" என்பதாக உலக வழக்கில் கொள்ளப்படுகிறது. மேலும் அவ் விஷயத்தை அதற்கென சாஸ்திர நீதி—நியமன சட்டங்களையும் உண்டுபண்ணி அதற்கு மாருக நடப்பவர்களை அக் கூட்டம் அந்த சாஸ்திரங்களின் பெயரால் தண்டிக்கவும் முற்படுகிறது. ஒரு கூட்டத்தார் எது செய்பினும் அது நீதியே, தர்மமே! அதற்கு மாருக ஒருவன் தன் தனிப்பட்ட ஹோதாவில் எது செய்யினும் அது நன்மையாஞலும், தீமையாஞலும் அது அநீதியே, அதர்மமே! மேலும் மேற் கூறிய விதமாகத் தண்டனை செய்யும்போது, அக்கூட்டம் (Herd) தனது குரூர குணத்தையே காட்டுவதாக இருப்பினும் அத்தர்ம நீதியெனும் சட்டப் பிரேமையால், தற்பெருமையும் அடைகின்றது. குற்றவாளிகளை மிகக் கொடூரமாகத் தண்டிப்பது (Lynehing) முதலிய அதிக்கிரமங்களுக்கு அடிப்

படையாக இருப்பது இந்த தர்ம நீதியெனும் சித்தாந்தமேயாகும். எனவே தர்ம கோட்பாடுகளின் சாராம்சம் என்னவெனின், கற்பின் பெயரால் மாதரைச் சொல்லொணுத் துன்பங்களுக்கும் பாதகம் (Sadism) போன்ற அக்கிரமங்களை, நியாயமாகக் காண்பிப்பதற்காக ஏற்பட்ட அநீதியாகும்.

கர்த்தரின் கருத்துக்களை ஒரு தனிப்பட்ட மனிதன் கூறும் .அத்தாக்ஷியைக் கொண்டு அங்கீகரித்து அதனையே ஆதாரமாகக் கொண்டு இயங்கும் எந்த இயக்கமும் பயனடையாது என்பது திண்ணம். ஏன்? ஓர் புதிய மகான் ஒரு காலத்தில் தோன்றி தான் கூறுவது தான் கர்த்தரின் சம்மதம் பெற்றது என்று பறை சாற்றினுல் எது உண்மை? எது பொய் என்பதை எவ்வாறு இக்காலத்திய கிறிஸ்துவமதம் நிலைநாட்ட முடியும்? இந்த எண்ணமே இப்போதும் புராட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்களைக் கலங்கவைத்தவா றிருக்கின்றது. இந்த எண்ணம் மேலோங்கியதால்தான், சுவிசேஷ மார்க்கம் (Protestantism) பல்வேறு சிறுபேத சமயங்களாக (Sects) சிதறுண்டு ஒன்றையொன்று தாக்கிப் பலன் குன்றிக் கிடக்கின்றது. இன்னும் நூறு வருடங்களுக்குள்ளாக இந்த சுவிசேஷ மார்க்கம் என்ற பெயரே இல்லாமற் போய், கிறிஸ்து மதம் என்ருல் பொது மதம் என்று மாறிவிடும் என்பதில் தடையில்லை.

ஆகமங்களும், வேத சுருதிகளும் (Revelations) திருச்சபையாகிய மதத்திலே தோன்றலாயின. மத தர்ம

கோட்பாடுகளும் இம்மாதிரியாகத்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். மதத் திருச்சபை எந்த விஷயங்களை ஆதரிக்கின்றனவோ அவையே தர்மம்; எவைகளை பகிஷ்கரிக்கின்றனவோ அவையே அதர்மம். எனவே தர்ம கோட்பாடுகளின் அந்தரங்க மர்மம் என்னவெனில் ஒரு கூட்டத்தாருடைய விருப்பும் வெறுப்புமேயாகும்.

மத நோக்கங்கள்

மதத்தை நாம் ஆராய்ந்ததிலிருந்து நமக்குத் தெரிவது என்னவெனில்:—

மதம் என்னும் ஓர் இயக்கம் மக்களிடையே தோன்ற மூலகாரணமாக இருப்பவை, மக்களிடையே குடிகொண்டிருக்கும் பயம், தற்பெருமை, துவேஷ குணம் இவைகளேயாகும். மனிதனுடைய ஆபாசங்களுக்கு ஓர் மேலான மரியாதை கொடுப்பதே மதத்தின் கோட்பாடு என்று கூறுவது நன்கு பொருந்தும். மனிதனுடைய துயரத்திற்குக் காரணம் இந்த ஆபாசங்களே யாதலின் இவற்றைப் பராமரிக்கும் மதமும் மனித சுகத்தைத் தகர்க்கும் கோடாரிக்காம்பு என்றாலும் மிகையாகாது. இந்த ஆசாபாசங்களுக்கு மதம் இம்மாதிரியான ஒரு பெருமையைக் கொடாதிருப்பின் மனிதன் அவற்றை அடக்கியாள ஆரம்பித்து வெற்றி பெற முடியும்.

மத ஆதரவாளர்களின் எதிர்ப்பு

இங்கு மதத்திற்கு ஆதாரமாகக் கூறப்படும் ஒரு சமாதானத்தை ஈண்டு கவனிக்க வேண்டியதிருக்கிறது.

அது பின் வருமாறு:— பயம், துவேஷகுணம் என்பன மக்களிடம் தோன்றும் இயற்கை குணங்களாம். மனித சமூகத்தில் அவை எக்காலத்தும் இருந்துகொண்டே இருக்கின்றன. இனியும் இருந்தே தீரும். எனவே அவற்றை நல்வழியிலே செலுத்தி தீமை புரியா வண்ணம் செய்ய வழி தேடுவதுதான் அறிவுடைமை யாகும். காமத்தால் ஏற்படும் தீமைகளை ஒழிக்க மக்கள் சமூகத்தில் பெண்கள் சார்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைப் போன்றே மேற்கூறிய இரண்டு குணங்களைப் பொருத்தமட்டிலும் கிறிஸ்துவ மத வைதீகர்கள் (Theologians) திருச்சபைகள் மூலமாக தர்ம கோட்பாடுகளை நியமித்திருக்கிறார்கள். விபச்சாரத் தால் ஏற்படும் கெடுதல்களைத் தடுப்பதற்காகவே கலியா ணம் என்ற ஒரு நியமனம் ஏற்பட்டது. அதேபோல் துவேஷ குணம் மக்களிடத்தே எப்போதும் இருந்தே தீரவேண்டியதாதலின், அதனை உண்மையாகவே கெடுதல்கள் புரிபவர்மீது செலுத்தி நன்மை புரிதலும் மேன்மையே. இவைகளைத்தான் திருச்சபையானது தர்ம கோட்பாடுகள் என்ற நியமனத்தால் செய்கின் றது என்பதாக மதவாதிகள் சமாதானம் கூறலாம்.

இந்த எதிர்ப்புக்கு நான் கூறப்புகும் சமாதானம் இரு வகைப்படும். (1) மேற்போக்காகக் கூறப்படும் சமாதானம்; (2) ஊடுருவிப் பரிசீலனை செய்து கூறும் மறுப்பு.

கிறிஸ்துவ மத திருச்சபையின் தர்ம கோட்பாடு கள் மேலானதென்று கூறுவது உண்மையல்ல. இது

முதல் சமாதானம். பயம், துவேஷம் என்னும் இவ் விரண்டு தீமைகளையும் ஆத்ம தத்துவ ஆராய்ச்சியாலும், பூத பௌதீக தத்துவ சாஸ்திர விசாரணையாலும் மனித சமூகத்திலிருந்தே துரத்திவிடலாம் என்பதாகக் கூறும் மறுப்பு.

முதலாவது சமாதானம் என்னவென்றால், திருச் சபையின் தர்ம கோட்பாடுகள் மனித சமூகத்தின் முற்போக்குக்கு ஏற்றதல்ல என்பது. அதுமட்டுமல்ல; அவைகள் மனிதனுடைய அறிவையும், ஆராய்ச்சியையும் அலட்சியப்படுத்துகிறது. ஏன் அவைகள் இக்குறைகளை உடையதாக இருக்கிறது எனின், அதற்கு ஆதாரமாக இருக்கும் சுவிசேஷத்தில் அவை காணப்படுதலேயாம். கிறிஸ்துநாதர் நம் எல்லோரையும் குழந்தையைப் போல் ஆகும்படி உபதேசிக்கின்றார். எல்லோரும் குழந்தைகள்போ லாகிவிட்டால் நாம் கணிதத்தின் (Differential calculus etc) முடிவைக் காண்பது எவ்விதம்? நாணயச் செலவாணி (Principles of currency) சித்தாந்தங்களைக் கையாளுதல் எப்படி? வைசூரி, மலேரியா போன்ற கொடிய வியாதிகளை எதிர்த்துச் சமாளிப்பது எவ்வாறு? இவ்வித நன்மைகளை யடையப் மனிதன் தலைப்படுவது இந்தக் கிறிஸ்துவ திருச்சபை களின் தர்ம கோட்பாடுகளின்படி அதர்மமேயன்றோ! ஆனால் இப்போது திருச்சபை கலைக்கியானத்தை எதிர்ப்பதில்லை என்பது மெய்தான். அது ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் அவ்வாறு செய்தே வந்தது.

ஏன் அப்படி செய்துவந்தது என்றால், கல்வி விருத்தி அடைந்தால் அறிவு விசாலமடையும், அதன்பிறகு அறிவு ஆதிக்கம் பெறும், அதன்பிறகு கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளை எதிர்க்க நேரிடும். ஆகவே கலைகளை படு மோசம் என்பதாகப் பறைசாற்றிவந்தது.

இரண்டாவது சமாதானம் கிறிஸ்துவ மதத் திருச் சபையானது தனது பற்றுக்கோடாகக் கொண்டு ஆதரிக்கும் படியான இந்த பயம், துவேஷம் என்ற இவ்விரண்டு பீடைகளையும் மனிதன் தன் கல்வி கேள்விகளாலும், தேச வர்த்தமான ஆராய்ச்சியாலும், தேசீய சீர்திருத்தங்களாலும் அறவே ஒழிக்க முடியும் என்பதாம்! மூடப் பழக்க வழக்கங்களாம் பாவ புண் ணியங்களென்றும் மத தருமக் கோட்பாடுகள் கட்ட விழ்ந்து விழவேண்டுமானால் மக்களின் கல்வி முறை முதலில் சீர்திருத்தப்பட வேண்டும். மௌட்டீகத்திற்கு மருந்து, கல்வி அறிவே. பயத்தையும் துவேஷத்தையும் மக்களிடத்தே இருப்பதை உணர்பவன், அதன் அருமை பெருமைகளைப் போற்ற ஆரம்பிப்பதோடு அவற்றை நிரந்தரமாக்கவும் முற்படுகிறான். அவைகள் அவன் மனதிலும் அவனை அறியாமலே புகுந்து ஆட்டு விக்கிறது. சாதாரண ஒரு கிறிஸ்தவன் இந்நிலைமை யிலேயேதான் இருக்கிறான். மனிதனுடைய இருதயத் திலே யிருந்து பயத்தைப் போக்கும் படியான மாதிரி யில் கல்வி யளிப்பது அசாத்தியமான காரியமல்ல. அவ்வித கல்வி இளங் குழவிப் பருவத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். குழந்தையை அன்புடன் நேசி

சீரிய நோக்கங்களும் பரந்த எண்ணங்களும் உடைய வர்களுடைய சகவாசம் ஏற்படும்படி செய். இருட்டிற் கும், சுண்டெலிக்கும், சமூகப் புரட்சிக்கும் பயப்படும் படியான கேவல — கோழை மனமுடைய மனிதர்க ளுடைய உறவு கலவா திருக்கும்படி இளஞ்சிங்கங்களைக் காப்பாற்று.

திட்டலும், தீட்டலும், மிரட்டலும், புரட்டலும் அவனை அணுக விடாதே! இவ்விதமாகக் குழந்தைகள் வளர்க்கப் படுமானல் அவர்களிடத்திலே பயம் என்பது எவ்வாறு தோன்றும்? துவேஷக் குணத்தைப் போக் குதல் சற்று பிரயாசையே! பொறுமை மனதில் ஏற் படாதவாறு சகல குழந்தைகளையும் ஒரே மாதிரியாக வளர்க்க வேண்டும். தனது நன்மையைக் கோரி அன்பைக் சொரியும் ஒரு சிலர் சதா இருக்கின்றனர் என்பதை அக்குழந்தை உணரவேண்டும். தனது இயற்கை பிரகாரம் தனியாக விடப் படுவதோடு, தனக்கு ஆச்சரியமாகத் தோன்றும்;— தேக சௌக் கியத்துக்கும் உயிருக்கும் ஹானி ஏற்படுத்தக் கூடிய விஷயங்களைத் தவிர மற்ற எல்லா காரியங்களையும் மனம் போல் செய்யும்படி விட்டு விட வேண்டும்.

பெண்கள் சம்பந்தமான எல்லா ஞானமும் பகிரங்க மாக்கப்படுவதோடு, பாமர மக்கள் குழந்தைகள் அறியக் கூடாதெனத் தற்காலத்தில் மறைத்து வைத்திருக்கும் எல்லாச் சமாசாரங்களையும் நமது குழந்தைகள் அறி யும் படியாக விட்டு விடவேண்டும். இந்தச் சுலபமான

விஷயங்களை நாம் அனுஷ்டிப்போமானல் நமது குழந்தைகள் பயமென்பதேயின்றி பூவும் மணமும் போல் சகோதர பாவனையுடன் ஒன்றி வாழ்வர் என்பது திண்ணம்.

தற்கால ஆசிரியர்கள் இதனை நன்கு கவனிக்க வேண்டும்.

இவ்விதம் வளர்க்கப் படும் குழந்தைகள் உலக வாழ்க்கையினுள் புகும்போது அநேக அக்கிரமங்களையும் அநியாயங்களையும், துக்ககரமான சம்பவங்களையும் குறுக்கிட நேரும். இந்த உலகில் நாம் காணும் மேலே குறிப்பிட்ட அநியாயங்களும், அக்கிரமங்களும், துக்க நிகழ்ச்சிகளும் இறந்த காலத்திலிருந்தே முளைத்த தெனலாம். ஆதியில் உயிர்வாழ்வதற்கென போட்டா போட்டி எல்லா உயிர்களிடத்தும், இருந்தே வந்தது. இன்னும் அஃது ஒழியவில்லை.

மக்கள் படும் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் தங்கள் வாழ்க்கைக்குப் போதிய அளவு பொருள் வசதி யில்லாமையே யாகும். பொருளில்லை யென்றால் இன்றைய உலகில் எதையும் செய்ய இயலாது.

எல்லோரும் உண்ணவேண்டும் உடுக்கவேண்டும். இப்போது நாம் அறிந்துள்ள விவசாய வியாபார ஏற்பாடுகளால், உயிர்வாழும் மாந்தர் அனைவருக்கும் வயிறார உணவளிக்கலாம் என்பதில் தடை யென்ன? உலகத்திலே ஜனத்தொகை அளவுக்கு மீறிப் போகாம

விருக்க அதற்கென அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை நாம் அறிவோம். ஆனல் அவ்வித முறைகளை அறிவுடைய மக்கள் கையாடா வண்ணம் தடை செய்து வருவது எது?

“மக்கள் பாழும் பஞ்சத்தால் நைந்துருகி நசித்தாலும் நசிக்கட்டும், ஆனல் கர்ப்பத்தடைமட்டும் கூடாது” என்பதாகக் கூறும் கிறிஸ்துவத் திருச்சபையின் மதக் கோட்பாடன்றோ!

பூவுலகில் மக்கள் தடையற்ற இன்பத்தோடு வாழ முடியும். அந்த இன்பத்தை அடையும் வழி மிகவும் சுலபமே. ஆனல் அவ்வாறு ஆனந்தத்தை அடையவிடாமல் தடை செய்யும் முட்டுக் கட்டை எது? மத சம்பிரதாயங்கள் தானே?

அறிவு விளக்கம் பெறும் உண்மை ஞானத்தைக்—கல்வியை நமது குழந்தைகள் பெற முடியாமல் மறைத்து நிற்பது மதம்தானே?

வல்லரசுகள் பெருமிதத்தால் வெம்போர் செய்வதற்கு மூலகாரண மானவற்றைத் தகர்த்தெறிய மனிதனை விடாமல் தடை செய்வது மதம்தானே?

ஆசாபாச பாவ புண்ணியங்கள் என்னும் அறக் கோட்பாடுகளுக்குப் பதிலாக மனிதன் அதர்ம தத்துவத்தைப் போதிக்க முடியாமல் தடை புரிவதும் மதம் தானே?

அன்புள்ளவர்களே! அறிவுடையவர்களே! கேளுங்கள்! சிந்தியுங்கள்! ஆத்திரப்படாமல் ஆவேசங் கொள்ளாமல், அமைதியுடன் சிந்தித்துத் தெளியுங்கள்!

நாம் இந்த மண்ணுலகத்தைப் பொன்னுலகம் ஆக்கலாம். ஆம்! தோழர்களே நிச்சயமாக ஆக்கலாம். ஆனல், நாம் உருவாக்க இருக்கும் அந்த பொன்னுலகத்தின் தலை வாயிலில் ஒரு பேய், மா பெரும் பேய், (Dragon) எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அது மனிதனை உள்ளே புகவிடாமல் தடை செய்துக் கொண்டே இருக்கிறது. நாம் பொன்னுலகில் புகுந்து புது வாழ்வு—இன்ப வாழ்வு நடத்த வேண்டுமென்றால் நாம் அந்தப் பேயை மாய்த்தாக வேண்டும்.

அதற்காகவே மாந்தர்களே ஒன்றுபடுங்கள்! அந்தப் பேயை ஒழிக்கும் திருப்பணியில் அணிவகுத்திட வாரீர்! அம்மையீர் வாரீர்! ஆண்களே வாரீர்! இளைஞர்களே வாரீர்! இழிவை ஒழிக்க நினைக்கும் எல்லோரும் வாரீர்! இதயமுள்ளவர்களே வாரீர்! அறிவின் காதலர்களே வாரீர்!

அந்தப் பயங்கரப் பேய் எது? மனிதனை வாழ விடாமல் தடுக்கும் அப் பேயின் பெயரென்ன? என்று தானே கேட்கின்றீர்கள்.

அப்பேயின் பெயர் மதம்.

மதப் பேய் ஒழிக! மனித இனம் வாழ்க!

மதத்தைப்பற்றி 'லெனின்'

மதம் என்றால் என்ன ?

மதம் என்பது பிறருக்கு உழைத்து வறுமைப் பட்டு, தாழ்த்தப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களை உற்பத்தி செய்யவும், அவர்களை விடுதலை அடைய வொட்டாமல்—தலையெடுக்க வொட்டாமல், அழுத்தி வைக்க ஏற்பட்ட சாதனங்களில் மிக முக்கியமானது.

o o o

மதம் ஏழை தொழிலாளர்களுக்கு செய்யும் உபதேசம்:—

"வாழ்நாள் முழுவதும் வறுமையினாலும், அன்னியர்களிடம் கொடுமைப் பட்டும், துன்பம் அனுபவிப்பவர்கள் தங்கள் துன்பங்களை அமைதியுடன் பொறுத்து கொண்டிருந்தால், அவர்கள் காட்டும் பொறுமைக்குத் தகுந்தவறே அடுத்த பிறப்பில், அல்லது மேலுலகில் குறையாத இன்பவாழ்வை பெறுவார்கள்" என்ற நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் புகுத்துவதாகும். பிறருடைய உழைப்பால் செல்வத்தைப் பெருக்கிப் பிழைக்கும் வஞ்சக முதலாளி கூட்டத்தாருக்கு மதம் உபதேசிப்பது எப்படி யெனின் "முதலாளிகள் கொள்ளையடித்து சம்பாதிக்கும் செல்வத்தில் சிறு பாகத்தை கோயில், குளம், சத்திரம், சாவடி முதலியவைகளுக்குச் செலவு செய்வதுடன், குருமார்கள், புரோகிதர்கள், ஊரார்கள் உழைப்பில் உடல் வளர்ப்பவர்கள் இவர்

களுக்குத் தானதர்மம் செய்துவிட்டால், அதுவே அவர்கள் செய்யும் பலதீமைகளைப் போக்கும் பரிகாரம்'' என்பதாகும். இந்த நம்பிக்கையை முதலாளிகள், மற்றவர்களை வஞ்சித்து வாட்டி வதைப்பதற்காக சரி யென்று ஒப்புக் கொள்கின்றனர். இவ்விதம் செய்வதே மோக்ஷ லோகத்திற்கு வழி யென்றும் பறை சாற்றுகின்றது மதம்.

o o o

அரசாங்கம் மதத்தோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது. மதத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்களை அரசாங்கத்துடன் சம்பந்தப்படவும் விடக்கூடாது. ஒவ்வொருவருக்கும் அவரவர் இஷ்டப்படி ஏதாவது ஒரு மதத்தைச் சாரவோ, அல்லது மதம் வேண்டாம் என்று கூறவோ, நீரீச்சுரவாதியாகவோ சுதந்திரம் இருக்க வேண்டும்.

o o o

மனித சமூகத்திற்கு அப்பால் இருந்து உற்பத்தி ஒழுக்கம் ஒன்று உண்டு என்பதை நாம் ஒப்புக்கொள்வதில்லை. அப்படிப்பட்ட ஒழுக்கம் ஒன்று இருப்பதாகச் சொல்வது மோசடியாகும். நாம் சம்பந்தப்பட்டவரை ஒழுக்கம் என்பது மனித சமூகத்தில் தொழிலாளர்கள் நன்மையைப் பொறுத்ததே யாகும்.

o

பூந்மகள் அச்சகம், சென்னை-1